விலை சதம் 50

★

பக்கங்கள் — 10

சகலவித பல் வியாதிகளையும் போக்கவல்லது

அண்ணா பற்பொடி

இலங்கையின் எப்பாகத்திலும் கிடைக்கும்.

கூடுதலாக அண்ணா பற்பொடியை வாங்கும் வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு

அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி 7418

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

மில்க்வைற்
அப்பியாசக் கொப்பி
100 மில்க்வைற் நீல சோப் அல்லது 25 மில்க்வைற் பார்சோப் அல்லது 10 மில்க்வைற் ஒரு இரு, பெட்டி சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்,
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 21 | பங்குனி 4 | ரபி. ஆகி 18 | ஞாயிற்றுக்கிழமை | (18—3—79) | இதழ் 36

# தமிழ்நாடு சட்ட - மேல் சபைகளுக்கு 'அமிர்' விஜயம்

## எம். ஜி. ஆர். ம. பொ. சியை சந்தித்து பேச்சு நடத்தினர்

### எம். எல். ஏக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

சென்னை, மார்ச் 17

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனிடம் எடுத்துக் கூறினர்,

கிழக்கிழங்கை சூறாவளி நிவாரணத்திற்கு தமிழக அரசு அளித்த 10 லட்சம் ரூபா உதவிக்கு திரு. அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் முதலமைச்சர் திரு. இராமச்சந்திரனிடம் நன்றி தெரிவித்தார்,

சட்ட,மேல் சபைகளுக்கு சென்றனர்

திரு. அமிர்தலிங்கமும் அவரது பாரியாரும் இன்று தமி

[10-ம் பக்கம் பார்க்க]

## இலங்கைத் தமிழரின் நியாயபூர்வ — போராட்டங்களுக்கு தமிழக மக்கள் ஆதரவு அளிப்பர்

### 'அமிர்' வரவேற்பில் கருணாநிதி

எழும்பூர், மார்ச் 17

இந்திய அரசு பங்களாதேஷ் மக்கள் விஷயத்தில் காட்டிய அதே மனிதாபிமான உணர்வுடன் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னையையும் அணுக வேண்டும்-

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை வரவேற்று எழும்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. ஆர். ரி. சீதாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. கருணாநிதி மேலும் பேசுகையில் கூறியதாவது;

இலங்கைத் தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்கவேண்டியது இந்திய அரசின் கடமை, இக்கடமையைச் செய்ய அரசு தவறக்கூடாது என மத்திய அரசைக் கோருகிறேன்.

நான் பல வெளிநாடுகளுக்கு விஜயம்செய்திருந்த போதிலும் இலங்கைஅரசுஎனது இலங்கை விஜயத்திற்கு தடைவிதித்தது

எனது இலங்கை விஜயம் இந்தியத் தமிழ் மக்களுக்கிடையேயான நட்புறவுப் பாலத்தை பலப்படுத்திவிடும் என்பதாலேயே எனது விஜயத்திற்குத் தடைவிதிக்கப்பட்டது

இலங்கைத் தமிழ்மக்கள் நடத்திவரும் நியாயமான போராட்டங்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் ஆதரவு அளிப்பார்கள் என்பது திண்ணம் [ம-இ]

கருத்தரங்கு ஏற்பாடு

## தமிழ் அரசர் பேணிய வைத்திய நூல்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியசக்கரவர்த்திகளான செகராஜசேகரனும் பரராஜசேகரனும் உருவாக்கிய ஆயுர்வேத நூல்களில் பொதிந்து கிடக்கும் வைத்திய இரகசியங்களை வெளிக்கொணரும் முயற்சியில் ஆயுர்வேத வைத்தியரான ரி. சி. நாகரட்ணம் ஈடுபட்டுள்ளார்.

இந்நூலினை பல மொழிகளில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்துள்ளதுடன் இது பற்றிய கருத்தரங்கு ஒன்றையும் அவர் நடத்தவிருக்கிறார். மேலும் இந்தியாவில் உள்ள ஆயுர்வேத வைத்தியர்கள், வைத்திய சஞ்சிகைகளின் ஆசிரியர்களுடனும் தொடர்பு கொண்டு இந்த பாரம்பரிய தமிழ் வைத்திய முறைபற்றி அறிமுகப்படுத்த எண்ணியுள்ளார்.

## மடாலயத் தலைவர்கள் வருகிறார்கள்

[நாவலப்பிட்டி]

மூப்பெரும் மடாலயத்தலைவர்கள் இருவார யாத்திரையை முன்னிட்டு இம் மாதப் 20-ம் திகதி இலங்கை வருகின்றனர்

கோவை கௌமாரமடாலயத்தலைவர் தவத்திரு முருகனருள் சுந்தரசுவாமிகள், பேரூர் சாந்தலிங்க மடாலயத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்; திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தலைவர் தவத்திரு முருகதாச சுவாமிகள் ஆகிய மூவ

[10-ம் பக்கம் பார்க்க]

# தமிழகத்தில்வழக்கறிஞர்கள் போர்க்கோலம்!

சென்னை, மார்ச் 17

தமிழ்நாடு அரசுக்கு எதிராக தமிழக வழக்கறிஞர்கள் போர்க்கோலம் பூண்டுள்ளனர்:

மதுரையில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நீதிவிசாரணை நடத்துமாறு வழக்கறிஞர்கள் சங்கம் விடுத்த வேண்டுகோளை தமிழக அரசு நிராகரித்ததை அடுத்து. சென்னை, மதுரை நீலகிரி ஆகிய இடங்களில் வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்துவருகின்றனர்.

### 50 வழக்கறிஞர்களும் 17 சட்ட மாணவர்களும் உண்ணாவிரதம்

மதுரையிலும் சென்னையிலும் 2-வது நாளாக வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்துவரும் அதேவேளையில் மதுரையில் 50 வழக்கறிஞர்களும், 17 சட்டமாணவர்களும் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

நீதிமன்றங்களைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பதென்று சென்னை வழக்கறிஞர் சங்கம் கூடித் தீர்மானித்தது.

மதுரையில் வழக்கறிஞரைத் தாக்கிய பொலிஸ் இன்ஸ்பெக்டரை வேலைநீக்கம்செய்யும்படியும் இச்சம்பவம் குறித்து உயர்நீதிமன்ற நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்தவேண்டும் என்றும் வழக்கறிஞர்கள் தமிழ்நாடு அரசைக் கோரியுள்ளனர்.

### எம். ஜி. ஆர். உறுதி

வழக்கறிஞர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து சட்ட நீதி பரிபாலன நடவடிக்கை எடுக்

[10-ம் பக்கம் பார்க்க]

### பூட்டோவின் மீளாய்வுமனு விசாரணை முடிவுற்றது

இஸ்லாமாபாத், மார்ச் 17

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவின் மரணதண்டனை மீளாய்வு மனுமீதான விசாரணையை பாகிஸ்தான் நீதிமன்றம் இன்றுடன் முடித்துக் கொண்டது'

தீர்ப்பு வழங்குவதற்கான திகதி ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படுமென்று உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனுப் ஹக் தெரிவித்தார். [இ]

மீளாய்வு மனு உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படும்பட்சத்தில் தீர்ப்பு வழங்கி 7 நாட்களின் பின் ஜனாப் பூட்டோ தூக்கிலிடப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

கூட்டணி கருத்தரங்கில் பேசிய

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரிடம் உயர்கல்வி அமைச்சு விளக்கம்

### செய்தி உண்மை எனப் பதில்

[யாழ்ப்பாணம்]


தமிழர் விடுதலைக் கூட்டணி கருத்தரங்கில் 'தரப்படுத்தல்' குறித்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கே. சச்சிதானந்தத்திடம் உயர்கல்வி அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி கருத்தரங்கில் 'தரப்படுத்தல்' குறித்து தாம் பேசியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பெரும்பாலும் சரியானவையே என்று விரிவுரையாளர் திரு கே சச்சிதானந்தம் அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்

கடந்த ஜனவரி 27-ம்திகதி யாழ் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பணிமனையில் இடம் பெற்ற கருத்தரங்கில் திரு சச்சிதானந்தம் பேசியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி குறித்தே யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஊடாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் கல்பகே விளக்கம் கோரியிருந்தார்

திரு சச்சிதானந்தம் உபவேந்தருக்கு அனுப்பியுள்ள விளக்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பத்திரிகைகளில் வெளிவந்த 'தரப்படுத்தல்' குறித்த எனது பேச்சுக்களை நோக்கமில்லாமல் எழுதியபோது தவறுகள் வந்திருக்கலாம், ஆயினும் அச்செய்தியில் உள்ளவை பெரும்பாலும் சரியானவையே இது குறித்து மேலும் விபரங்கள் தேவையானாலும் அனுப்பி வைக்கிறேன் [இ]



சைவ பரிபாலன சபை நடாத்திய பண்ணிசைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவில் எடுத்த படம். நிற்பவர்களில் இடமிருந்து வலமாக திருவாளர்கள் இராஜ இராஜேஸ்வரன் தங்கராசா, மூ. மயில்வாகனம், வ. கந்தசாமி, நம. சிவப்பிரகாசம், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட முன்னாள் யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம், வலமிருந்து இரண்டாவதாக சிறப்புச் சொற்பொழிவாளராக கலந்துகொண்ட யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி புஸ்பா செல்வநாயகம் ஆகியோருடன் பரிசில்பெற்றோர்.

# நெல்லியடி பெற்றோல்நிலைய கொள்ளை கூட்டுறவுச்சங்க ஊழியருக்கு 19ந் திகதி வரை றிமாண்ட்

[நெல்லியடி] பருத்தித்துறை பொலிசாரால் நெல்லியடி பெற்றோல் நிலை விசாரணைக்குட் படுத்தப்பட்டபின் கொள்ளை சம்பந்தமாக கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்க ஊழியர்களான சிவசுப்பிரமணியம், நடராஜா, செல்வநாயகம் ஆகிய மூவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்கள்.

பருத்தித்துறை நீதவான் திரு கே ஞானச்சந்திரன் இம்மூவரையும் 19-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

வியாழக்கிழமை காலையில் கொள்ளையிடப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொலிசார் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்து கொண்டார்கள். பருத்தித்துறை பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுவரும் அதே வேளையில் வியாழக்கிழமை இரவு நெல்லியடிச் சந்தியில் திடீர் பரிசோதனையை மேற்கொண்டார்கள். சகல வாகனங்களும் நிறுத்தப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை.

# WANTED

A Mechanical Engineering Graduate as Lecturer from May 1979.

Salary scale Rs 650/- to 1,200/- per mensem. and allowances

Candidates can apply pending results.

Application forms available in Institute office.

Director,
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE,
1936 Vaddukoddai

# New Admissions

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

Sessions commence 14-5 79.

Admissions close 20-4-79.

Prospectus with application forms available in Institute Office at -/50 cts

Those in financial need may apply for Scholarship.

Director
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
1935 Vaddukoddai.

# THE JAFFNA LAW CENTRE

G A Q. B. A FIRST IN COM.
I A A. I A B. CHARTERED.

வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
கடந்த வருடம் 100% சித்தி
உங்கள் கல்வியை உடன் ஆரம்பியுங்கள்

# மத்திய கிழக்கு சீமெந்துத் தொழிற்சாலையில் வேலைக்கு விண்ணப்பங்கள்

மத்திய கிழக்கிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு Labourers) இடமுண்டு. சீமெந்து உற்பத்தியில் ஈடுபாடுள்ள, அனுபவமுள்ள தொழிலாளர்கள் தங்களின் மூன்றுபுகைப் படங்களுடன், அனுபவ அத்தாட்சிப்பத்திரத்துடன் 24-3-79ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். இரு வருட ஒப்பந்தமும், மாதம் ரூபா 3000/- ஊதியமும் வழங்கப்படும். உணவு, இருப்பிட வசதிகள் இலகுவாக செய்து கொடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் 25-3-79 ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு தங்கள் செலவில் கீழ்குறிப்பிட்ட விலாசத்தில் பிரசன்னமாயிருக்கவும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆனி (June) மாதத்தில் வேலையை பொறுப்பேற்கவேண்டும்.

**கே. ஜெயபாலசிங்கம் அன் கம்பனி**

கஸ்டம்ஸ் வியூ,
காங்கேசன்துறை.

லைசென்ஸ் இலக்கம்: 324

1939

# ஒருவழிப்பாதை சட்டத்தை மீறினராம்

[யாழ்ப்பாணம்] சட்டவிரோதமாக ஒருவழிப் பாதையில் சைக்கிளில் சென்ற 50 பேரை பொலிசார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர், காங்கேசன்துறை வீதி, மானிப்பாய்வீதி கஸ்தூரியார் வீதி ஆகிய பாதைகளில் சட்டவிரோதமாகச் சைக்கிளில் சென்ற இவர்களை யாழ். போக்குவரத்துப் பகுதி சப்-இன்ஸ்பெக்டர் திரு சிசிரகுமார தலைமையில் சென்ற பொலிசார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்தோரையும் அவர்களது சைக்கிள்களையும் லொறியில் ஏற்றி பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டு சென்ற பொலிசார் சைக்கிளை வைத்துக்கொண்டு சைக்கிள் உரிமையாளர்களை பிணையில் செல்ல அனுமதித்தனர். (கொ-இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

லம்பெரற்றா (L I 150 cc) ஸ்கூட்டர் 6ஸ்ரீ 2000 தொடர் நல்ல நிலையிலுள்ளது. பரம்ஸ், 23, மக்கள் சந்தை, பருத்தித்துறை. 1906

6 சிறீ தொடரிலக்க லம்ரெட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. சர்மா, பல்கலைக்கழக அலுவலகம், திருநெல்வேலி 1931

## தேவை

நல்ல அனுபவமுள்ள லேத்மன், வெல்டர் இருவர் தேவை. வதனு வெல்டிங் வேக்ஸ் அன் இண்டஸ்றீஸ் 44/3, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1916

தொல்புரம் பூதராசி அம்பாள் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சந்திரன் அரிசி ஆலைக்கு வேலை செய்யக்கூடிய நடுத்தர வயதுள்ள பத்துப்பேர் உடன் தேவை. நேரில் வரவும். இ. பாலசுந்தரம், உரிமையாளர், சந்திரன் அரிசிஆலை, தொல்புரம், சுழிபுரம். 1887

தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் திருத்தக்கூடிய அனுபவமுள்ள திறமைவாய்ந்த மெக்கானிக் யாழ். நகரிலுள்ள ஸ்தாபனமொன்றிற்கு தேவை. விபரங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தை குறித்து 25-3-79க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 1920, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1920

## பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1892

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate. Diploma In Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1891

## WANTED

Audit / Account Trainees Accountancy Firm in Jaffna calls applications from those who elect accountancy Taxation as a carreer, Apply: Advt. No 1930, C/o Eelanadu Ltd, Jaffna. 1930

## வகுப்புகள்

பாலர்பாடசாலை ஆசிரியைக்கான இலவச ஆங்கில வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு நடைபெறும். பயில விரும்புவோர் நேரில் வரவும் பாலர் கல்விக்கழகம் 77 அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1938

## தவறிவிட்டதா?

யாழ்ப்பாணம்-கண்டி வீதியில், தபாற்கட்டைச் சந்திக்கும், மாம்பழம் சந்திக்குமிடையில் சிறிய தொகைப் பணத்துடன் மணிபேர்ஸ் கண்டெடுக்கப்பட்டுள்ளது: உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் பெற்றுக்கொள்ளலாம். நா. கமலநாதன், 152, நாயன்மார் வீதி. நல்லூர். 1933

சங்கானை ப. நோ. கூ. சங்கம்

## கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 12,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்வி விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப படிவங்கள் பதிவுத்தபால் மூலம் இடதுபக்க மூலையில் "வெற்றுச் சாக்குகள் கேள்வி" என்று எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 02 - 04 - 79.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
14 - 03 - 79. 1911

## சங்கானை ப. நோ. கூ. சங்கம்

## விளம்பரம்

வெண்காயம் மிளகாய்ச் செய்கையாளருக்கு ஓர் நற்செய்தி

வெண்காயம், மிளகாய் பயிர்களைப் பாதிக்கும் கொடூர நோய்களைத் தடுப்பதற்கான சுமிசிடின் கிருமிநாசினி 4 அவுன்ஸ், 2 அவுன்ஸ் போத்தல்கள் எம்மிடம் இருப்பில் உள்ளன. இவற்றை மலிவான விலையில் விற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவைப்படுவோர் உடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

சங்கானை,
15-3-79. 1919

## நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199, தந்தி: வைரம்.



# எட்டாத கனிகள்!

ஓர் அமாவாசை இருட்டு. கொடிகாம புகையிரத நிலையம் என்றும்போல் இல்லாது அமைதியில் மூழ்கிக் கிடந்தது. மின்சாரம் இல்லாததன் காரணத்தால் பந்தங்கள் கொளுத்தி விடப்பட்டிருந்தன. இந்த நவநாகரிக யுகத்தில் இப்படியும் ஒரு புகையிரத நிலையமா? அங்கும் இங்கும் நாய்கள் எச்சில் இலைகளுக்காகச் சண்டையிட்டுக்கொண்டிருந்தன கூ... என்று குரல் எழுப்பிக்கொண்டு புகையிரதம் தூரத்தில் வருவதை நன்றாக உணரக்கூடியதாக இருந்தது. சங்கர் தன் கைகடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான். 8 மணி 5 நிமிடம் ஆகிக்கொண்டிருந்தது அம்மாடி இன்றுவது புகையிரதம் நேரத்துக்கு வந்து தொலைந்துவிட்டதே! உலகப் பெரும் சாதனைகளில் இது ஒன்றல்லவா? என்று கூறிக்கொண்டு தன் கைப்பெட்டியைத் தூக்கிய வண்ணம் புகையிரதத்தில் ஏறுவதற்கு ஆயத்தமானான். கடகட படபட என்னும் சத்தத்துடன் புகைவண்டி அவனைத் தாண்டி கீச் என்ற சத்தத்துடன் நின்றது. அகப்பட்ட பெட்டியில் பாய்ந்து ஏறி இருப்பதற்கு இடம் தேடினான். இருப்பிடங்கள் ஒன்றிரண்டு காலியாக இருந்தன. நின்று பிரயாணம் செய்யும் பிரயாணிகள் ஒருவர்கூட இல்லை. பெல்பெட்டம் அணிந்த இளம் வாலிபர் ஒருசிலர் யாரையோ தேடுவதுபோல் ஒவ்வொரு பெட்டியாக தங்கள் கழுகுக் கண்களைச் சுழரவிட்டபடி ஒருமூலையிலிருந்து வண்டியின் மறுமூலையை நோக்கி நகருகின்றனர். சங்கர் வெறுமையாகக்கிடந்த மூலை இருக்கையை நோக்கி விரைந்து சென்று எதிர்மூலையில் அமர்ந்திருந்த இளநங்கையைப் பார்த்து மன்னிக்க வேண்டும்; இந்த இருக்கையில் யாராவது இருக்கின்றார்களா? என்று வினவினான்.

இல்லீங்க நீங்கள் உட்காரலாம். அது வெறுமையாகத்தான் இருக்கின்றது' என்று முத்துப்போன்ற பற்கள் தெரிய சங்கரைப் பார்த்துக் கூறினான் அவள்.

'நீலப்பட்டாடை கட்டி தங்க விக்கிரகம் என இந்தப் பூலோகத்திற்கெல்லாம் தான் தான் மகாராணி என்ற நினைப்பில் என்னவோ மூலை இருக்கையில் வசதியாக அமர்ந்துகொண்டு சாளரத்தின்வழியே வெளிப்புறக் காட்சிகளை இரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள், கன்னத்தில் கையூன்றியபடி. சங்கர் தன் இருக்கைக்கு மேல் உள்ள தட்டில் தன்னுடைய கைப்பெட்டிகளை வைத்துவிட்டு தான் கொண்டுவந்த புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினான். தபால் வண்டி பளை புகையிரத நிலையத்தை வந்தடைந்து ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டது. கொழும்பிலிருந்து யாழ்தேவி இன்னும் வரவில்லையாம். மேலும் 10—15 நிமிடங்கள் தாமதித்துத்தான் தபால்வண்டி புறப்படுமாம். பிரயாணிகளில் அரைவாசிக்கு மேல் வண்டியை விட்டு வெளியே றிவிட்டார்கள். சிலர் காப்பி குடிக்கவும், சிலர் தாம் கொண்டுவந்த போத்தல்களில் தண்ணீர் எடுக்கவும் சென்றுவிட்டனர். சிலர் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணி அமைதியாக உணவு உண்ணவும் தொடங்கிவிட்டார்கள். சங்கரும் அவர்களுடன் சேர்ந்துகொள்ள விரும்பித் தன் கைப்பெட்டியைத் திறந்து உணவுப் பார்சலையும், நீர்ப்போத்தலையும் எடுத்து எதிரே மூலை இருக்கையில் அமர்ந்திருந்த இளம் நங்கையை நோக்கி "மன்னிக்கவும், உங்களையும் என்னுடன் உணவருந்த அழைக்கின்றேன்' என்றான் சங்கர். தன்கையில் இருந்த நீர்ப்போத்தலை அவளிடம் நீட்டியவாறு! நன்றி நான் சாப்பிட்டுவிட்டுத்தான் ரெயிலில் ஏறினேன், என்னைப் பற்றிக் கவலைப்படாமல் நீங்கள் சாப்பிடுங்க'' என்று கன்னத்தில் குழி விழ புன்னகை உதிர்த்தபடி கூறினாள். நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தனீர்கள்? எவ்விடத்தில் புகைவண்டியில் ஏறினீர்கள்? என்று வினாமேல்வினா தொடுத்தான் சங்கர்.

"நான் பருத்தியூரைச் சேர்ந்தவள். புகைவண்டியில் இடம்பிடிப்பதற்காகக் காங்கேயன்துறைக்கு சென்று புகைவண்டியில் ஏறினேன்'' என்று விடை பகர்ந்தாள் முத்துப் பல்லழகி.

"அப்படியானால் நீங்கள் 3-4 மணியளவில் தானே உணவு அருந்தியிருப்பீர்கள். உணவு அருந்தி ஐந்தாறு மணித்தியாலங்கள் ஆகிவிட்டன. ஒரு மனிதன் சுகவாழ்வு வாழ்வதற்கு குறைந்தபட்சம் நாலு மணித்தியாலங்களுக்கு ஒரு முறையாவது உணவு அருந்தவேண்டும். வெட்கப்படாமல் வாருங்கள் உணவு அருந்துவோம். மேலும் நான் புகைவண்டியில் பிரயாணஞ் செய்யும்போது எப்பொழுதும் இருவருக்குப் போதியளவு உணவு கொண்டுசெல்வது வழக்கம். ஏன் எனில் என்னால் தனிமையில் உணவருந்த முடியாது. அது மட்டுமல்லாமல் மற்றவர்கள் பார்த்திருக்கும்போதும் என்னால் சாப்பிடமுடியாது. கையலம்பிவிட்டுச் சாப்பிட வாருங்கள்'' என்றான் சங்கர்.

"விநோதமான பழக்கம் தான். ஆனால் நல்ல பழக்கமும்கூட. அப்படியாயின் நான் நீங்கள் சாப்பிட்டு முடியும்வரை கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறேன். கவலைப்படவேண்டாம்'' என்றான் தன் புன்சிரிப்பை அடக்கியவாறு.

"நீங்கள் அழகி மட்டும் அல்ல. குறும்புக்காரியும்கூட. தயவுசெய்து சாப்பிட வாருங்களேன்'' என்று அழைத்தான் சங்கர். அவன் கண்களில் வீசிய பிரகாசம் அவளைக் கட்டளையிடுவதுபோல் தோன்றியது. அவன் குரலின் மென்மை அவளைக் கெஞ்சுவதுபோல் இருந்தது. என்ன செய்வது என்று அறியாமல் சங்கருடன் உணவருந்தச் சம்மதித்தாள் அவ்வழகி.

",ஐயோ! உப்புமாவா? நம் இருவருக்கும் போதாதே. உப்புமா என்றால் நான் ஒரு வெட்டு வெட்டிவிடுவேனே'' என்றாள் அவள்.

"அப்படியாயின் நீங்கள் மொத்தத்திலேயே சாப்பாட்டுச் சீதையா'' என்றான் சங்கர். "ஒன்றுமே புரியவில்லையே'' என்று தன் புருவங்களை வில்லாக்கியபடி ஆச்சரியம் தொனிக்கக் கேட்டாள் அவ்வழகி.

"இல்லை ராமனோடு சீதையைத்தான் சேர்த்துச் சொல்வார்கள். சாப்பாட்டு ராமன் என்ற சொல் இருக்கிறதல்லவா? இதைச் சாப்பாட்டுப் பிரியர்களான ஆண்களுக்குச் சொல்லுகிறார்கள், சாப்பாட்டுப் பிரியைகளுக்கு உதாரணமாகச் சொல்லுவதற்கு ஒருவரும் இல்லையே, அதனால் தான் உங்களைச் சாப்பாட்டுச் சீதை என்றேன்'' என்றான் சங்கர். கொக் என்ற சிரிப்பு. அச்சும் அச்சும் என்ற தும்மல். சிரிப்பை அடக்கமுடியாமல் சிரிக்க முயன்ற அழகிக்குப் பிரக்கடித்துவிட்டது. கண்கள் கலங்கச் செய்வதறியாது திகைத்துநின்ற அவ்வழகியின் தலையில் தன் உள்ளங்கையால் பொத்துப் பொத்து என்று தட்டினான் சங்கர். தட்டிய பின்னர் தான் ஊர் பெயர் தெரியாத பெண்ணைத் தொட்டுவிட்டேனே என்ற ஏக்கம் கவலையாக வாட்டியது "மன்னித்துக்கொள்ளுங்க, அவசரத்திலே என்ன செய்வது என்று தெரியாமல் உங்கள் மண்டையைப் பதம் பார்த்துவிட்டேன்'' என்றான் சங்கர்.

"இல்லீங்க பரவாயில்லை. ஆபத்திற்கு பாவமில்லை'' என்றாள் கயல்விழியாள் தன் கன்னஞ் சிவக்க. புகையிரதம் அதிக நேரம் நின்றதால் சேமிப்புக் கலங்களில் சேமிக்கப்பட்ட மின்சாரம் முற்றாகத் தீர்ந்துவிட்டதுபோலும். இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்பினாள் போலும் அந்நங்கை. "மிஸ்டர் நீங்கள் எந்த ஊர்? எங்கே என்ன தொழில் செய்கின்றீர்கள்? உங்கள் பெயர் என்ன?'' என்று வினாக்கணைகள் தொடுத்தாள். "ஏன் வெளிச்சத்திலேயே கேட்க உங்களுக்கு பயமா?'' என்று கேட்டுக்கொண்டே எங்கோ தூரத்தில் உள்ள தேநீர்க் கடையில் எரிந்துகொண்டிருந்த லாம்பில் இருந்து வீசிய மங்கலான ஒளியைக்கொண்டு அவள் முகத்திலே ஏற்படும் மாற்றங்களை ஆராய முற்பட்டான் சங்கர். பொங்கிக் கொண்டுவந்த சிரிப்பை அடக்கமுடியாமல் 'ப்புபு' என்று சிரித்தேவிட்டாள் வேல்விழியாள். இருவரும் நெருங்குவதுபோன்ற உணர்வு. உடலால் அல்ல, உள்ளத்தால். அதற்கு ஊக்கமளித்துக் கொண்டிருந்தது இருட்டு. வெட்கத்தை இருவரும் தூக்கி எறிந்துவிட்டு ஒவ்வொருவரைப்பற்றியும் நன்றாகக் கேட்டு அறிந்துகொண்டார்கள் "சக்சக் சகசக கூ கூ கூ' யாழ்தேவி பளைக்கு வந்துவிட்டது. இரு நிமிடங்களில் தபால்வண்டி கொழும்பை நோக்கி அசையத்தொடங்கியது. இருண்டுகிடந்தபெட்டிகள் திடீரென ஒளிமயமாகின. சங்கர் கொண்டுவந்தபார்சலில் உணவு மிஞ்சிக் கிடந்தது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து முறுவலித்தனர். எஞ்சியிருந்த உணவைச் சுவைக்கவிரும்பவில்லைப் போலும். இருவரும் கையலம்பிக்கொண்டனர். சங்கர்தான் படித்த புத்தகத்தை மீண்டும் தூக்கிக்கொண்டான். புத்தகத்தைப் படிக்கமுற்பட்டான். அவனையறியாமலே ரமா என்று உதடுகள் பலமுறை முணுமுணுத்தது. எங்கே தன்னுடைய உதடுகளின் துடிப்பை ரமா அவதானித்துவிடுவாளோ என்ற பயத்தில் புத்தகத்தை முகத்துக்கு நெரே தூக்கிப் பிடித்து ரமாவின் பார்வையிலிருந்து தன் முகத்தை மறைத்துக்கொண்டான் எவ்வளவு இனிமையாக-எவ்வளவு பண்பாகப் பேசுகிறார் சங்கர். இவரைப்போல் ஒரு துணைவரை அடைந்தால் என்னுடைய வாழ்வு என்றுமே மகிழ்ச்சிகரமாக அமையும்,

"சவீது''

அவரும் என்னைப்போன்று ஒரு உயிரியல் பட்டதாரிதானே. நாம் இருவரும் ஒன்றுசேர்ந்து கொண்டால் ஒன்றாகப்படித்து. ஒன்றாகத்தொழில் செய்துவாழ் நாள் முழுவதும் ஒருவரை ஒருவர் பிரியாமல் இருந்திடலாம் என்ற நினைப்பில் அவள் மூழ்கிக்கிடந்தாள். இடையிடையே சங்கரை நோக்கினாள். அவன் அழகனென்று சொல்லிவிட முடியாது பொதுவான உயரம் கறுத்து பருத்த உடம்பு அவனைப் பார்த்தால் பார்த்த எவரும் பணிந்துபோகக்கூடிய ஒருவித தோற்றம். ஒரு விஞ்ஞானியோ அன்றேல் ஒரு தத்துவஞானியோ என்றுதான் அவனைப்பார்த்த எவரும் கணித்துக்கொள்வார்கள். சங்கர் புத்தகத்தால் தன் முகத்தை மறைத்துவைத்திருந்தது ரமாவிக்கு மிகவும் வசதியாக இருந்தது, சங்கரின் உருவத்தை அவள் தன்னால் எவ்வளவு நேரம் பார்க்க முடியுமோ அவ்வளவு நேரமும் பார்க்க நினைத்தாள் சங்கரும் புத்தகத்தைப் படிப்பதுபோல் பாவனைசெய்து கொண்டு, இதேபோன்ற சிந்தனையில்தான் மூழ்கிக் கிடந்தான். எவ்வளவு நேரம் பிடித்து வைத்த பிள்ளையார் போல் இருக்கமுடியும். சங்கர் தன் கைகால்களை நீட்டி மேலும் வசதியாக இருக்க முயற்சிசெய்தான். விதி யாரைத்தான் விட்டது. சங்கரின் கால்கள் ரமாவின் கால்களோடு உரசிக்கொண்டன.

ரமா கற்பனையுலகில் சிறகடித்துப் பறந்தாள், காதலர்களாக தானும் சங்கரும் காதற் கவிதைகள் பாடி உல்லாசப் பறவைகளாக விண்வெளியில் சிறகடித்துப் பறப்பதுபோல, எப்படி எப்படியோ தன்னையும் சங்கரையும் ஒன்றாகச் சேர்த்து கற்பனை செய்யமுடியுமோ அப்படியெல்லாம் கற்பனை செய்து இரசித்துக்கொண்டிருந்தாள் ரமா; ஏன் சங்கர் கூட அப்படித்தான். தனக்கென ஓர் கற்பனை உலகை அமைத்து அழகுத் தேவதை ரமாவுடன் புதுக்குடித்தனத்தையே ஆரம்பித்துவிட்டான், சங்கருக்கு காலை அசைக்கக் கூட விருப்பமில்லை. எங்கே தனக்குக் கிடைத்த இந்த அற்ப இன்பம் நொடிப்பொழுதில் அருகிவிடுமோ என்ற அச்சம் சங்கரால் பொறுக்க முடியவில்லை, அவனுடைய உணர்ச்சிகள் பொங்கியெழுந்தன, ரமாவின் அழகை அள்ளிப் பருக எண்ணினான்போலும். கையில் இருந்த புத்தகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு அசையாமல் ரமாவையே நோக்கிக் கொண்டிருந்தான். ஆனால் ரமாவோ கற்பனையுலகில் இருந்து கனவுலகிற்குள் சஞ்சரித்துவிட்டாள். கனவுகூட இனித்ததுபோலும், அவள் செவ்விதழ்கள் புன்சிரிப்பையே உதிர்த்துக் கொண்டிருந்தன. மூலையில் அசையாத சிலையாய் தங்கவிக்கிரகம் எனச் சயனித்து இருந்த அவளை முருகன்கூடக் கண்டால் வள்ளி தெய்வானை இருவருமே இவள் அழகுக்கு நிகர் இல்லையென்று மூன்றாவது மனைவியாக ரமாவைத் தெரிந்தெடுக்க முயற்சித்திருப்பான். அவ்வளவு அழகு. எவ்வளவு எளிமை அவள் தோற்றத்தில். சிரிக்கும்போது வெண்கலச் சலங்கைகளின் ஒலி, அவள் கதைக்கும்போது யாழை மீட்டுவரும் இன்னிசைகூட அவள் ஒலிக்கு நிகராகாது. அவள் கழுத்தைத் திருப்பும்போதெல்லாம் அவள் செவிகளில் மாட்டியிருந்த வளையல்கள் டன் முறை அசைந்து அவள் அழகுக்கு மேலும் மெருகூட்டின. இப்படியல்லவா என் வருங்கால மனைவி இருக்கவேண்டும், அடைந்தால் ரமாவை அல்லவா அடையவேண்டும். ஆகா என்ன அழகு. இவள் என் மனைவியானால் என் தலைவியாகத்தான் இருப்பாள் ஆனால் என் தலைவிதி அதற்கு இடங்கொடுக்குமா? தலைவிதி சீசீ...... என்னை அது வாழவிட்டால்தானே. கற்பனையுலகில் இருந்து விலகி அவன் கடந்தகால நினைவுக்குச் சென்றுவிட்டான்.

அன்று அவனோ கட்டழகுக் காளை. வயது பதினெட்டு. கண்டவர் விரும்பும் உடற்கட்டு. மொத்தத்திலே அவன்





(4-ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ஓர் ஆண் சிங்கம். ரஞ்சினி அவன் இதயத்து ராணி, இளமைப் பருவம்தொட்டு அன்பாகப் பழகி, பருவம் அடைந்த பின்னர் காதலர்களாக மாறி, நீ இன்றேல் நானில்லை என்று தத்துவம் பாடி அடைந்தால் உன்னை அன்றேல் மரணதேவி, இது சத்தியம் என்று வாக்குகள் கொடுத்து களவாகக்கூடிக் கழித்திருந்தபோது சாதி என்ற அரக்கன் வெடிவைத்துத் தகர்த்துவிட்டான். சங்கரின் காதற்கோட்டையை அந்தோ பரிதாபம். இருவரும் புரிந்துகொண்டனர். இல்லை, இல்லை வலோற்காரமாகப் பிரிக்கப்பட்டனர். சங்கர் கொழும்புக்கு அனுப்பப்பட்டான். ரஞ்சினி துடித்தாள்; கலங்கினாள், கதறினாள், தனிமையில் வாடினாள் பல நாள். பாவம் அவளால் இந்த வேதனையைத் தாங்கமுடியவில்லை. விடிவுகாண நினைத்தாள். வாழ்வுக்கே முடிவு வைத்துவிட்டாள் அவள் சபித்தது சங்கரையல்ல. தாங்கள் வாழ்ந்த சமுதாயத்தை பிஞ்சு உள்ளங்களை, கருத்தொன்றிக் காதலர்களாகி. தம்பதிகளாக இருந்த எங்களைச் சாதி என்ற பெயரால் பிரித்து எங்கள் வாழ்வைப் பாழாக்கிவிட்டீர்களே. எங்களைப் போன்ற காதலர்களைப் பலியாக்கியும் உங்கள் தாகம் தீரவில்லையா?

சங்கர் யன்னலினூடாக வெளியே நோக்கினான் புகைவண்டி மாகோவைத் தாண்டிச் சென்றது. வீதியோரங்களில் நின்ற மின்விளக்குகளின் ஒளி அவன் கண்களில் பட்டுத் தெறிக்கின்றது. அவன் கண்களில் தோன்றிய நீர்த்துளியைப் பார்க்கத்தான் யாருமேயில்லையே. ஏன் முன்னே இருக்கும் கொடியிடையாள் ரமாகூட தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருக்கிறாள். சங்கர் கைக்குட்டையினால் கண்களைத் துடைத்துக் கொள்கிறான். சிந்தனையைத் திசை திருப்பமுயலுகிறான். திசைதிருப்ப முடியவில்லை. பாவம் தேவிகா அவனைப் பிடித்துக்கொண்டாள்.

சர்வகலாசாலையில் இரண்டாம் ஆண்டைச் சங்கர் முடித்துவிட்டான். அப்போதுதான் தேவிகா விஞ்ஞானப் பட்டப்படிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டு அங்கு வந்திருந்தாள். சங்கர் தமிழ் மாணவர் கலைவிழாவுக்கு நாடகம் எழுதியிருந்தான். அதில் கதாநாயகனாக அவனே நடிக்கவும் செய்தான். அந் நாடகத்திற்குத் தேவையான கதாநாயகியைத் தேடிய போதுதான் தேவிகாவை சங்கர் கிடைக்கப்பெற்றான். குழைந்து குழைந்து பேசும் அவள் அழகு, மருளும் விழிகள், அன்னநடை இவையெல்லாம் சங்கரை மயக்கிவிட்டன. பேராதனைப் பூந்தோட்டத்தில் தங்கள் காதற் சிகரங்களை அமைத்துக் கொண்டனர். எப்பெப்பெல்லாம் ஓய்வு நேரம் கிடைத்ததோ அப்பப்ப எல்லாம் காதலர்கள் சந்தித்தார்கள். தங்கள் வாழ்வைப் பற்றிச் சிந்தித்தார்கள். பாவம் முடிவுதான் காணமுடியவில்லை. தேவிகாவின் பெற்றோர்களுக்கு தேவிகாவின் காதல் விசயம் தெரியவந்தது. இலட்சம் இலட்சமாகத் தேங்கிக்கிடக்கும் சொத்துக்கள் பிரிந்து வெளியிடத்துக்குப் போய்விடும் என்ற அச்சத்தால் தேவிகாவை அவளின் சொந்த மச்சானுக்கே தேவிகாவின் பெற்றோர்கள் தாரைவார்த்துக்கொடுத்துவிட்டார்கள். குமுறினான்! கெஞ்சினாள், பயனில்லை. ஆறுதல் கூறி அவளைத் தேற்றினான் சங்கர். தன்னை மறக்கும்படி வேண்டினான். இப்பொழுது நிசமாகவே தேவிகா சங்கரை மறந்து பல பிள்ளைகளுக்குத் தாயாக வாழ்ந்துகொண்டிருக்கிறாள் சங்கரைப் பொறுத்தமட்டில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய கதைதான்.

சங்கர் தேவிகாவை மறக்க முயற்சித்தான். அவன் நாடோடியாக அலைந்தான். நடந்தவற்றை மறக்கப் பல வழிகளைத் தேடினான். முடியவில்லை. தன்னுடைய சோகக் கதைகளை எழுதிக்குவித்தான். சங்கர் உயிரியல் பட்டதாரியாக இருந்தபோதும் எழுத்துத்துறையில் அவன் புகழ்பரவிக்கொண்டிருந்த நேரம் அது. சங்கர் தேவிகாவை ஓரளவு மறந்துவிட்டான். அப்போதுதான் சாந்தா சங்கரிடம் கல்வி கற்கத் தனிப்பட்ட முறையில் வந்துபோய்க் கொண்டிருந்தாள். உயிரியலில் டார்வினின் தத்துவத்தை விளக்க, இயற்கைக் கோட்பாடுகளை விளக்க, கூர்ப்பு விதிகளை எடுத்துக்காட்ட சங்கர் கையாளும் உதாரணங்கள் எல்லாமே சாந்தாவை மயக்கிவிட்டன. அவள் சங்கர் கல்வி கற்பிக்கும்போது அவன் உதடுகள் அசைந்து தேன் தமிழ் சிந்தும் அழகையே ரசித்திருப்பாள். சங்கர் கல்வி கற்பிக்கும்முறையே ஒரு தனிரகம் உயிரியலைவிரும்பிப்படிக்க வந்த சாந்தாவுக்கு சங்கர் மீதுள்ள மதிப்பு நாள்தோறும் வளர்ந்தது தனக்கு தக்க ஆசான் கிடைத்துவிட்டான் என்ற பெருமை சாந்தாவுக்கு. அவள் சங்கரிடம் கல்விகற்க அடக்க ஒடுக்கமாய் எளிமையாய் நேரம் காலம் தவறாமல் வந்துபோய்க்கொண்டிருந்தாள் சங்கர் கொடுக்கும் குறிப்புகளைத் தன் ஏட்டில் முத்துப்போன்ற எழுத்துக்களால் பதித்துக்கொள்வாள் தன் முன்னே கூனிக்குறுகி அடக்க ஒடுக்கமாய் பண்புடன் கல்வி கற்றுவரும் சாந்தா சங்கரை ரொம்பக் கவர்ந்துவிட்டாள் அவளுக்கு ஒருமுறை சொல்லிக்கொடுத்தால போதும் அவள் மனதில்அழுத்தந்திருத்தமாகப் பதிந்துவிடும். சங்கர் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த காதல் அரும்பு மீண்டும் தளிர்விடத் தொடங்கிவிட்டது.

நடந்தவற்றை மறந்துவிட்டுப் புதுவாழ்க்கைவாழ விரும்பினான். அதற்குத் துணைவியாகச் சாந்தாவைத் தேர்ந்தெடுத்துவிட்டான். ஒருநாள் மாரிகாலத்து கும்மிருட்டு, வானத்தைப் பிய்த்துக்கொண்டு பெரும் இரைச்சலுடன் கடும் மழை பெய்துகொண்டிருந்தது. படித்துமுடிந்தவுடன் சாந்தா தனிமையில் வீடுசெல்லப் பயந்தாள், சங்கர் குடையுடன் அவளை வீடுவரை அழைத்துச்சென்றான் மழையும் இருட்டும் அவனுக்குச் சாதகமாய் அமைந்தன அப்பொழுதுதான் தன் உணர்ச்சியைச் சாந்தாவிடம் வெளியிட்டான். அவள் மௌனஞ் சாதித்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் இருவருடைய பெற்றோர்களும் கலியாணத்துக்குச் சம்மதித்துப் பொருத்தம் பார்க்க முற்பட்டனர். ஐயகோ! சாந்தாவுக்கு எட்டில் செவ்வாயாம் அவளுக்குத் தாலிப்பொருத்தம் இல்லையாம் அவளுக்குக் கணவனுடன்வாழ இரண்டாண்டுகள் கூட வாழும் பாக்கியம் கிடையாதாம். சங்கரின் அந்தக் காதலும்கலியாணப்பேச்சோடு கருகிவிட்டது

சங்கர் ரமாவைப் பரிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான். எட்டாப்பழத்துக்குக் கொட்டாவி விடாதே, ரமாவையும் உன்னையும் சமுதாயம் ஒன்றாக வாழவிடாது. குலம், கோத்திரம், சாதி, மதம், ஜாதகப பொருத்தம், வரதட்சனை இன்னும்எத்தனை எத்தனையோ காரணங்களைக் காட்டி உங்களைப்பிரித்துவிடும். ஆகவே அவளை அடைய முயற்சிக்காதே என்றது அவனது மனச்சாட்சி. புகைவண்டி ரூகம நிலையத்தைத்தாண்டி முன்னேறிக்கொண்டிருந்தது. ரமா அசையத் தொடங்கிவிட்டாள். உயிரற்ற தங்க விக்கிரகம் அசைவதுபோல, கண்களை விழித்தாள் நாணித்தலைகுனிந்தாள். பின் முகம்கழுவித்தலைசீவி தன் அழகுக்கு மேலும் மெருகூட்டிச் சங்கர்முன் அமர்ந்து கொண்டாள். சங்கர் தன் பிளாஸ்கில் இருந்து கோப்பியை வார்த்து ரமாவுக்குக் கொடுத்தான் நன்றி சங்கர் காப்பி ரொம்பப் பிரமாதம் என்றாள் காப்பியைப் பருகியபடி. தயவுசெய்து உங்கள் முகவரியைக் கொடுப்பீர்களா. உங்களுடைய சொந்த நூல்நிலையத்தில் அதிக புத்தகங்கள் வைத்திருப்பதாகச் சொன்னீர்களே! ஏதாவது புத்தகம் இரவல் வாங்க உதவலாம் அல்லவா? என்றாள்.

சங்கர் தன் காற்சட்டைப் பையினுள் கைவிட்டு தன்னுடைய முகவரி அட்டையை எடுக்கமுயன்றான். ஏதோ ஒரு சக்தி தடுத்துநிறுத்தியது. ரமா உனக்கு எட்டாதபழம், அவளை அடைய முயற்சிக்காதேஎன்று யாரோ காதுகளில் குசுகுசுப்பதுபோல் இருந்தது. சங்கர் வெட்டொன்று துண்டிரண்டாக தன்னுடைய பிரச்சினைகளைத் தீர்க்கமுடிவுகட்டினான், என்னுடைய பிரச்சினைகள் என்னோடேயே அழிந்துபோகட்டும். ஒன்றும் அறியாத இந்தப் பச்சைக் குழந்தையை ஏனோ தான் காதல் என்னும் நஞ்சூட்டி வதைக்கவேண்டும். அவள் தன்னுடைய வழியில் செல்லட்டும், அவளுக்கு நிச்சயம் சிறப்பான எதிர்காலமுண்டு என்ற நோக்குடன் சங்கர் போலிமுகவரியையெழுதி ரமாவிடம் கொடுக்கவும், புகைவண்டி மருதானை நிலையத்தை வந்தடையவும் சரியாக இருந்

(9-ம் பக்கம் பார்க்க)


# உங்கள் தாயார் தினமும் உங்களுக்கு புரோற்றினெக்ஸ்® தருவது ஏனென்று தெரியுமா?

**ஆம் அது சொக்லேட் சுவைகொண்டதாம்**

ம்.... ம்.... அதுவும் சரிதான், ஆனால், புரோற்றினெக்ஸ் 56% புரதச் சத்து கொண்ட ஆரோக்கியமான பானம் என்பதாற்தான் தாயார் அதனை வாங்குகிறார் என்பது எனது எண்ணம்.

**புரதச் சத்து? அதுஎன்ன செய்கிறது?**

உங்களது போன்ற இளம் உடம்புகளுக்கு, தசை நார், எலும்பு, மூளை விருத்திக்கு புரதச்சத்து தேவை புரோற்றினெக்ஸிலுள்ள புரதம் புத்தி கூர்மையை உண்டாக்கிறது. நோய்கள் வராமல் பாதுகாக்கிறது.

**என்ன? புரோற்றினெக்ஸ் இத்தனையும் செய்கிறதா?**

உண்மையாகவேதான்.

அதுமட்டுமல்ல, புரோற்றினெக்ஸ் மற்றெந்ததையும் விட எடைக்கு எடை மிக உயர்ந்த புரதச் செறிவுள்ளது. அத்துடன் விற்றமின்களும் கனிப் பொருட்களும் நிறைந்தது.




புரோற்றினெக்ஸ் தெரிந்தெடுக்க அம்மா உண்மையாகவே கெட்டிக்காரிதான்

அப்படியே மீண்டும் மீண்டும் கூறிக்கொள்ளலாம்.

கைக்கடக்கமான 50 கிறும் பக்கெற்றுகளிலும் மலிவான 125 கிறும் பக்கெற்றுகளிலும்



**புரோற்றினெக்ஸ் சாதாரண மோல்ற் பானத்திலும் உன்னதமானது**

Grant K & E 924

## இலக்கியத்துறையில் இளைய தலைமுறை - 8

# பணத்துக்காக எதையும் எழுதுபவர்கள் சமூக விரோதிகள் என்கிறார் இந்தப் பெண் எழுத்தாளர்

'ஈழநாடு' பெண் வாசகர்களுக்கு என்மீது மிகுந்த கோபம். இளையதலைமுறை தொடர்தொடங்கி இத்தனை வாரங்கள் ஆகிவிட்டனவே, இன்னுமா உங்கள் கண்ணில் எமது பிரதிநிதி ஒருவராவது படவில்லை. இது அவர்களது கோபத்துக்குக் காரணம். எனது தாமதத்துக்குக் காரணம் உண்டு.

தொடர்ந்து பல பெண் எழுத்தாளர்கள் தொடரில் இடம் பெறுவார்கள்.

சரி சந்திப்போமா?

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள இராமநாதன் மண்டபத்தில் அன்று ஒரு இலக்கியக் கூட்டம். எனது குறுநாவலான 'கலட்டுத்தரை' நூலின் அறிமுகக்கூட்டம். வளாக தமிழ் இலக்கியமன்றம் நடாத்தியது. அவ்விழாவிலே பேசிய முத்து இராசரத்தினம் என்பவர் 'இப்படியெல்லாம் எழுதினால் எவன் படிப்பான். எப்படிப் பணம் சம்பாதிக்கிறது, பணத்துக்காகத்தான் எழுதவேண்டும்; நஷ்டப்படுகிறதுக்கல்ல' என்று பேசினார். அவர் அமர்ந்துவிட்டதும் தலைமைதாங்கிக்கொண்டிருந்த மாலினி கந்தசாமி பேசினார். பேசினாரா? பொறிதான் பறந்தது. அத்துணை சத்திய ஆவேசம்.

பணத்துக்காக எதையும் எழுதலாம் என்கிறாரே. இவர்களெல்லாம் எழுத்தாளர்களா? வெட்கக்கேடு. ஒழிக்கப்பட வேண்டிய, தாமாகவே அழிந்து போகின்ற சமூகவிரோதிகள், என்றுவிட்டு கோபாவேசத்தோடு ஒரு பாடலைப்பாடினார். (புறநானூற்றிலோ, பாரதி பாடலோ நினைவில் இல்லை. சபைமுழுவதும் கரகோஷம் செய்தது. உண்மையிலேயே உடல் புல்லரித்துப்போய்விட்டது.

ஒரு கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் ஆற்றல் எல்லாருக்கும் வந்துவிடுவதில்லை. மாலினிகந்தசாமிக்கு தலைமை தாங்கும் ஆற்றல் நிரம்ப உண்டு. எனது அனுபவத்தில் இப்படியொரு தலைமையை எந்த விழாவிலும் சந்திக்கவில்லை. அவர் தலைமை தாங்கினால் அந்தத் தலைமைக்காகவே கூட்டம்முடியும்வரை அசையாமல் இருக்கலாம்.

மாலினி கந்தசாமி தமிழ் இலக்கியமன்றத்தின் தலைவராக இருந்தவர். யாழ். வளாகத்தில் தமிழ்இலக்கியமன்றம் ஆற்றிய பணிகள் பிரசித்தமானவை. பௌதிக விஞ்ஞானத் துறையில் பயின்றபோதும், இலக்கியங்கள்மீது ஓர் இலக்கியத்துறை மாணவியைவிடக் கூடுதலான பரிச்சயம் உள்ளவர் இலக்கியப் போக்குகளை நுணுக்கமாகப் புரிந்துவைத்திருப்பவர். இலங்கையர்கோன் முதல் இன்றைய இளம்எழுத்தாளர்வரை அவர்களதுஇலக்கியப் பணிகளை இவர் ஊன்றிக் கவனித்து வருகிறாரென்பதை வளாகத்தில் அவரைச் சந்தித்து உரையாடியபோது தெரிந்துகொண்டேன்.

காவலூர் எஸ். ஜெகநாதன்

அமைதியான தோற்றத்துடன் பூனையாகப் பதுங்கியிருக்கும் மாலினி, தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது புலியாவதைப் பார்க்கவேண்டுமே. ஆழமான சிந்தனை வெளிப்பாடுகளான கதைகளையே அவர் மிகவும் விரும்புகிறார். வெறும் பொழுதுபோக்குகளையும், சில்லறை மனப்பிரச்னைகளை வைத்துக்கொண்டு கதை என்று இழுத்தடிப்பதையும் அவர் வெறுக்கிறார்.

முற்போக்கு என்று கூறிக்கொண்டு போலித்தனமாக, மனச்சாட்சியை அடைவு வைத்துவிட்டு எழுதுவதைக் கண்டு உள்ளம்குமுறும் இவர், இனத்தின்மீது மாறாத பற்றுதல் கொண்டவர். மாலினி கந்தசாமி என்றபெயர் ஈழத்து இலக்கியத்துறையில் ஓரளவு அறிமுகமானது.

என்ன ஒரு கதை, கவிதை எதுவுமே எழுதாமல் அறிமுகமாகிவிட்டாரா?

அவசரப்பட்டுவிடாதீர்கள்?

ஒருதடவை 'சிவசக்தி'யைச் சந்தித்துவிட்டு வருவோம்.

வரதன் யாழ்ப்பாணத்து இளைஞன். கணிதம், விஞ்ஞானம் இவற்றிலெல்லாம் திறமைசாலி. அடக்க ஒழுக்கமான, ஒழுக்கமுள்ள வாலிபன். 'தாத்தா நான் யாழ்ப்பாணம் போட்டு வாறன். அப்பிடியே லைபிரறிக்கும் போட்டுத்தான் வருவன்' என்றுவிட்டு விடைபெற்றவன் திரும்பிவந்தானா? இல்லை காவற்படையின் துப்பாக்கிக்கு இரையாகி பிணமாகத்தான் வந்தான்.

பிண ஊர்வலத்திலே தாத்தா நடந்துவருவதைப் பாருங்கள்... கிழவர் அர்த்தமில்லாமல் நிமிர்ந்த வானத்தைப் பார்த்தார். கிளியொன்று தனியாகப் பறந்துகொண்டிருந்தது. சாலையோரத்து மரங்கள் தங்களைத்தாங்களே தலையில் அடித்துக்கொண்டிருக்கின்றன- பூமி நடுங்குவதுபோல் தெரிகிறது அவர்பிரமையா? அல்லது தர்மமே ஆட்டம் கண்டுவிட்டதா?

கதையில் பல இடங்களில் இதுபோன்ற பல மின்னற் கீற்றுகள். ம்...சிந்திக்கத் தொடங்கினால் போதும்... என்று கதையை முடிக்கிறார் சிவசக்தி. புதிய உலகத்தில் வெளிவந்த 'ஊர்வலம்' என்ற சிறுகதைதான் அது.

'நிரபராதிகள் நியாயம் தேடுகிறார்கள்' என்ற சிவசக்தியின் சிறுகதை அனைத்துவளாக ரீதியில் யாழ் வளாகதமிழ் மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது. வழக்கம் போன்று காதல், தோல்வி, சீதனம் என்றில்லாது பலபிரச்னைகளையும் அறிவுபூர்வமாக அணுகி தன் பார்வையை விரித்து கதைகளை எழுதுகிறார். 73-ம் ஆண்டளவில் எழுதத் தொடங்கிய சிவசக்தி ஆறேழு கதைகளை வெளியிட்டுள்ள போதும் அத்தனையும் வெறும் கதைகளாக இல்லாமல் தரமாக இருப்பது தனிச்சிறப்பு.

அளவுக்கதிகமான பாத்திரங்கள், சம்பவங்கள் இவற்றால் சிறுகதை முயற்சியில் தோல்வியானபோதும் 'வேலிசரியில்லாட்டில் இப்படித்தான்' என்ற செந்தமிழில் வெளிவந்த சிறுகதை இலக்கிய நோக்கில் மேம்பட்டுத்தான் நிற்கிறது. கலவரகாலத்தில் லொறியில் கொழும்புக்குப்போன அப்பா திரும்பிவரவில்லை... அப்பா இனி வரமாட்டார் என்ற உணர்வு திரும்பத்திரும்ப.. திரும்பத்திரும்ப என்று கதை முடிகிறது. முடிகிறதா? இல்லை நமது நெஞ்சிலே சித்திரமாக பதிந்துவிடுகிறது. சிவசக்தியின் சிறுகதைகளின் முடிப்பு மிகஅருமையாக இருக்கும்.

சிவசக்தி கதைகளோடு மட்டும் நின்றுவிடவில்லை. தரமான பல புதுக்கவிதைகளையும் மரபுக் கவிதைகளையும் எழுதியுள்ளார். உயரப்பறந்த கழுகுகளைக் கண்டு உள்ளம் ஏங்கிய தேனீ கழுகுகளின் சுயரூபம் தெரிந்தபோது தாளப்பறந்தாலும் நான் தாவரங்களுக்கு உதவுகிறேன் என்று தலைநிமிர்வதுதான் திருப்தி என்ற புதுக்கவிதை. சிரித்திரன் ஆண்டு மலரில் வெளியானது.

வாழத்தெரியாமல் வாழ்வைப்பலியாக்கும் நிலைகண்டு வையம்விட்ட கண்ணீர்தான் சடல் என்கிறார் ஒரு கவிதையில்.

சித்தத்தில் நெருப்பாக நிறைவேறாக் கனவுகளைச் சுமந்திருக்கும் சிவசக்தி இத்தரையில் இந்நிலைக்கு முடிவென்ன என்று கேட்டு இனியொரு யுகப்புரட்சி எழுவதுதான் எப்போது என்று கேட்கிறார். கவித்துவ உள்ளத்தின் கம்பீரத்தை நாம் அங்கே பார்க்கிறோம்.

நம் தமிழ்ப் பெண்கள்மீது விதிக்கப்பட்டுள்ள தலையாய கொடுமையான சீதனக் கொடுமையை எதிர்த்து எழுதியதோடு நில்லாமல் பல்கலைக் கழகமட்டத்தில் மாதர் இயக்கங்களில் பணியாற்றியும் உள்ளார். எழுத்தொன்று வாழ்வொன்று என்று இல்லாமல் இரண்டும் ஒன்றாகவாழும்நேர்மைத் திறனை நான் அவரிடம் கண்டேன்.

சாதிக்கொடுமையை எதிர்த்துதிட்டமாகப்போர்தொடுக்கின்றன அவரது எழுத்துக்கள். மேடை ஏறியோர் பேச்சினால் சாதிகள் மறைந்தே போகாது-அவர் கோடை வாழ்க்கையில் குமுறும்எரிமலை கொடுமையும் சாகாது என்று பாடுகிறார். என்று நம் தமிழரின் தன்னலம் சாகும், அன்றுதான் எமது கைவிலங்குகள் வீழும். என்றெல்லாம் இனஉணர்ச்சிகொண்டு பலபாடல்களைப் பாடியுள்ளார்

சிவசக்தியும் இலக்கியத்துறையிலே நன்கு அறிமுகமானவர் மாலினி கந்தசாமியைப்போல, ஆனால்இருவரும் ஒருவரேதான் என்பது பலர் அறியமாட்டார்கள்.

ஈழத்தில் பல இளம் பெண் எழுத்தாளர்கள் தோன்றாமல் இல்லை அவர்கள் இலக்கியம் என்றால் என்னவென்று அறியாமல் - புரியாமல் வானொலியின் வர்த்தகசேவைக்குப் பலியாகி 'மொட்டைக்கடிதங்களை' விமர்சனங்களாக ஏற்று பூசை செய்து தம்மைப்பலியிட்டுவிட்டார்கள்.

மாலினி கந்தசாமி (சிவசக்தி) இவற்றுக்குப் பலியாகாத துளிர்க்கும் இலக்கிய வாதி. எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் எமது நம்பிக்கையை அவரது எதிர்காலச் செயல்பாடு அவமாக்கக் கூடாது.

## வையமே சொர்க்கம்

மன்னுயி ரெல்லாந் தன்னுயி ராக
மதித் தறங் காக்கு மரசும்
இன்னுயிர் யாவும் மகிழ்வொடு வாழ
இறையருள் வேண்டுந் தூயோர்
கற்பவை கற்றுக் கயமையை நீக்கிக்
கருத்தொடு வாழும் மேலோர்
பொற்பது பேணி மனையறங் காத்துப்
பெருமை கொள் பீடுடை மடவார்
உடுக்கை யிழந்தோர் கைபோ லாங்கு
இடுக்கண் களைவார் நட்பு
அடுத்தவர் வாழ்வினை அண்டிக் கெடுக்கா
தவர் நலன் பேணு மயலான்
உறவின ராகி ஒற்றுமை பேணி
ஆக்கத் தருவா ருறவு
மறவழி நீக்கி மாணவ ருயர்வை
மறவா தோச்சுங் குரவன்
ஏவா துணர்ந்தே ஒளியாய் விளங்கும்
அறிவாஞ் செல்வப் புதல்வர்
ஓவா தறவழி ஓம்பிக் காத்து
உயிராய் உணரும் தாதை
உயிரின் மேலாய் மானங் காக்கும்
உத்தமர் நிறை நன் நாடு
அழிபினும் வாழ்வு அஞ்சா தேற்கும்
ஒழியாஞ் சத்திய வாழ்வு
நோய்நொடிக் காளாய் நலிதலுறாமல்
தீவழி மாய்க்கும் உறுதி
அண்டிக் கெடுப்பா ரவர்வழி நாணி
அரிதினில் நீங்கும் தீரம்
இன்னோ ரன்ன இனியநற் பேறெலாம்
ஒன்றா யமைந்திடில் வையமுஞ் சொர்க்கமாம்

ஏ. நமசிவாயம்

# எழுதுபவருக்கு தெளிவு வேண்டும்

பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் பத்திரிகைகளின் பங்கு கணிசமானது. அதில் வெளிவரும் கருத்துக்கள் சரியாக இல்லாவிடினும் வெகுசனப் பரபரப்பில் அவை பலமான தாக்கத்தை உருவாக்கும். இதன் விளைவாகத் தோன்றும் தப்பபிப்பிராயங்களை உடனுக்குடன் விவாதித்து சரியான கருத்தில் தெளிவு பெறாவிடின் 'பரவலான சமூகம்' தொடர்ந்தும் தவறான பாதையில் செல்லும் என்பதில் ஐயமில்லை.

சில வாரங்களுக்குமுன் ஈழநாட்டில் திரு எஸ். ஜெகநாதன் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலக்கியத்தை அனுபவிப்பவர்கள் மத்தியில் சிறு சர்ச்சையையேனும் ஏற்படுத்தியிருக்கும்.

தமது கட்டுரையின் ஆரம்பத்தில் அவர் ஒரு மொழியின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதே படைப்பிலக்கியந்தான் என்கிறார் அது அடிப்படையிலேயே தவறானதாகும். ஒரு மொழியின் வளர்ச்சி வெறும் ஆக்க இலக்கியத்தினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. ஆக்க இலக்கியம் அம்மொழி, அம்மொழிசார்ந்த சமூக மாறுதல்கட்கு ஒரு பிரதிபலிப்பாக இருக்கலாம். இவர் தமது கருத்தை நிறுவவில்லை, ஒரு கணம் பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கில மொழியிலும் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் ஆங்கில மொழி வளர்ச்சியடைந்தது இலக்கியத்தை - ஆக்க இலக்கியத்தை வைத்துத் தீர்மானிக்கையில், அக்காலகட்ட நாடகாசிரியனான ஷேக்ஸ்பியருக்கு நிகராகக்கூட யாரும் புதிய படைப்புகளை வெளியிடவில்லை -ஆக்கவில்லை என்பதை வைத்துப்பார்க்கையில் ஆங்கில மொழி அக்காலகட்டத்திலிருந்ததைவிட வளர்ச்சியெய்தவில்லை எனக் கூறவேண்டி வரும். நிதர்சனத்தில் இது கேலிக்குரியாதே.

இதன்மூலமே மொழி வளர்ச்சியென்பது அது பேசப்படும் சமூகத்தின் பயன்பாட்டுத் தேவைகளை அது பூர்த்திசெய்யும் அளவிலேயே தங்கியுள்ளது புலனாகும்.

மேலும் இலக்கியமென்பது ஆக்க இலக்கியம் மட்டுமல்ல கூறப்படும் விடயம் மனித 'அழகியல் தேவை'யைப் பூர்த்திசெய்யும் அளவிலேயே அதனுடைய இலக்கிய அந்தஸ்து தங்கியுள்ளது. இதன் அடிப்படையிலேயே பல நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் இலக்கிய அந்தஸ்து பெறுதுபோவதும் கட்டுரை வகைகள் இலக்கியமாகமதிக்கப் படுவதும் நிகழ்கிறது.

அதனை அடுத்து ஜெகநாதன் ஈழத்தின் தேசிய இலக்கிய கோஷத்தை முன்வைத்து இலக்கியத்தில் புதுப்புனல் பாய்ச்சியவர் கைலாசபதியே என்ற கருத்தை முன்வைக்கிறார். இவர் தமது வசனங்களில் 'கைலாசபதி போன்றவர்கள்' என்றே கூறிவந்த போதும் அவ்வார்த்தை பிரயோகம் வாசகர்களின் மனதில் நான் கருதியதையே கருத வைக்கும் இவர் ஓர் எழுத்தாளர் என்பதை மனதிற்கொண்டால் வார்த்தைப்பிரயோகம் தவறான அர்த்தத்தை எமது மனதில் உருவாக்காது என்ற நம்பிக்கை பலப்படுகிறது. பிறிதோரிடத்திலும் இந்தக் கைலாசபதி போன்றவர்கள் எனும் பிரயோகம் காணப்படுகிறது. அந்த இடத்தில் இப்பிரயோகம் ஆழ்ந்த கருத்தை கூறுகிறது பல்கலைக்கழகத்தில் இலக்கியப் படைப்பாளிகள்

16ம் பக்கம் பார்க்க

# அரங்கும் அவையும்

## ஒப்பியல் அரங்கில் கச்சியப்பர், மணிவாசகர், சேக்கிழார், அருணகிரி

அகில இலங்கை சைவ மகாசபையின் கச்சியப்பர் விழா மாவைக்கந்தன் ஆலய வில்லூ மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஆதீனகர்த்தாவின் ஆசியுரையுடன் தொடங்கியது. காலை இடம்பெற்ற ஒப்பியர் அரங்கு செந்தமிழ்த் திலகம் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் சுவைமிக்க சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது. கச்சியப்பரை மணிவாசகருடன் ஒப்புநோக்கி திரு. விநாயகமூர்த்தி அவர்களும் சேக்கிழாருடன் ஒப்பிட்டு திரு. க. உமா மகேஸ்வரனும், அருணகிரியுடன் ஒப்பிட்டு பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் உரையாற்றினர். ஒப்பியல் நோக்கில் இலக்கிய ரசனையுடன் பல தத்துவார்த்தங்களை சுவையுடன் விளக்கும் வகையில் இது அமைந்ததும் ஐம்பதுக்கு மேற்பட்ட கற்றறிந்த வல்லுநர் ஒன்றி பல அனுபவங்களைப்பெற்ற தன்மையும் மெச்சப்பட வேண்டிய அம்சங்கள். மாலை நிகழ்ந்த தத்துவ அரங்குக்கு யாழ். பல்கலைக் கழக இந்து கலாச்சாரப் பகுதிப் பேராசியர் கா. கைலாசநாதக் குருக்கள் தலைமை தாங்கினார். மாயை, திருவருள், மலபரிபாகம் பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றன.

### பழம்பெரும் நடிகர்களும் பக்கப்பாட்டு பாடியோரும்

கொட்டகைக் கூத்துக்களில் அக்காலநடிகர்கள் தாமாகவே பாடி நடிப்பர். பாட்டுக்களை மெருகூட்டி களைகட்டச்செய்வர். பக்கப்பாட்டுப் பாடுவோர். இந்தவகையில் பழம்பெரும் நடிகர்களாக மிளிர்ந்தோரில் சிலர் இணுவில் சீதைச் சுப்பர், பெரியவிளான் சின்னத்துரை, இணுவில் நாகலிங்கம், வேல்நாயர், கைவெட்டிச் சுந்தரம், குப்பிளான் வேலையா, கிரிமலைப் பொன்னுச்சாமி, இணுவில் சரவணமுத்து, பபூன் எஸ். கே. செல்லையாபிள்ளை, கன்னிகா பரமேஸ்வரி சின்னையாதேசிகர், கரையூர் ஜெயராஜன், இணுவில் இ. சுப்பையா, காங்கேசன்துறை வி. வி. வைரமுத்து ஆகியோராவர்.

பக்கப்பாட்டுப் பாடியவர்களில் சிலர் பைக்கிரி சின்னத்துரை, சிட்டான், றெக்கோட் சண்முகம், உடுவில் கே சின்னப்பு ஆவர். ஹார்மோனியம் வாசிப்பதில் பேர்பெற்றவர்கள் நல்லூர் சர்மா, எம் சோமசுந்தரம், வண்ணை வேணுகோபால் ஆவர்.

### 'மாப்பிள்ளை தேவை' நாடகத்தில் மாமனார் பங்கு

சென்றமாதம் வீரசிங்கம் மண்டபத்தில்மேடையேறிய கலைஞர் அருமையின் வார்ப்பான 'மாப்பிள்ளை தேவை' என்ற நகைச்சுவை இசை நடனநாடகத்தில்மாமனாராகத் தோன்றிய கலைஞரின் தோற்றமும்ஆடிப்பாடிகுணசித்திர இயல்பு குன்றாமல் நடித்த பாங்கும் அவையைக் கவர்ந்தது. பழைய கிராமிய மெட்டுப் பாடல்கள் எவ்விதம் நாடகங்களுக்கு எடுப்பாய் அமைகின்றன என்ற உண்மையை இப்பாத்திரம் வலியுறுத்திநின்றது. சினிமாப்பாட்டு மெட்டுக்களும் நவீன சினிமா நடிகர்களின் சாயல் நடிப்பு, அசைவு நெளிவு நாடக ஓட்டத்தைத் திசைதிருப்பி திரையை ஞாபகமூட்டுவன என்றும், கலைமெருகுக்கு ஊறு தகம் செய்வன என்றும் பரவலாக கலையுலகு இன்று பேசிக்கொள்வதில் உண்மை இல்லாமலில்லை.

### கலைவளர்க்க ரசிகர் அவைகள்

தரமான நாடகங்கள் உட்பட நல்ல கலை நிகழ்ச்சிகளை சுவைஞர்களுக்கு அளிக்கும் உயர்நோக்கில், நாடக அரங்கக் கல்லூரியால் ஆரம்பிக்கப்பட்ட ரசிகர் அவையும், இலங்கை அவைக்காற்று கலைக்கழகம் தொடக்கிய ரசிகரவையும் யாழ்ப்பாணத்தில் நன்கு செயல்பட ஆரம்பித்துள்ளன. வருடாவருடம் பத்துக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளை குறைந்த தொகை செலுத்தி பார்க்கும் வாய்ப்பினை அங்கத்தவர்கள் பெறுவதுடன், அவர்கள் செலுத்தும் முற்பணம் முதலீடாகவும் உதவுகிறது. வாசலில் நுழைவுச் சீட்டு எடுத்துப் பார்ப்பவர்களும் சேர, எந்த ஒரு கலைநிகழ்ச்சிக்கும் அறுநூறுவரை ரசிகர்கள் குறிப்பிட்ட நேரத்தில் கூடுவதையும் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்துக்குத் தொடங்கிக் குறித்த நேரத்தில் முடிவதையும் கலைஞர்கள் சிருஷ்டிகர்த்தாக்கள் திருப்தியுறுவதையும் காண்கிறோம். இத்தகைய ரசிகரவைகள் சென்னை பட்டினத்தில் இருபதுக்கு மேல் இயங்கி நற்பணி புரிகின்றனவாம். நாடகத்துறைவளர இத்தகைய அவைகள் பல பிராந்தியங்களிலும் உருவாக நாம் அங்கத்துவம் பெற முன்வரவேண்டும்.

### 'கோடை' நாடகமுடிவில் மேடை

அண்மையில் நாடக அரங்கக்கல்லூரி மேடையிட்ட 'கோடை' நாடகம் முடிந்ததும், அவையிலிருந்தும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சங்கீத நிபுணர்கள், இளம் நடிகர்கள்-ஆண் பெண் இருபாலாரும்தான் மேடைக்கு வந்து நடிகர்களை, இயக்குநர் எம். குகராசாவை கண்காணித்த கலைஞர்கள் ஏ. தாசீசியஸ், எம். சண்முகலிங்கம் என் போரைப்பாராட்டி மகிழ்ந்தனர். உள்ளத்து உணர்வுகள் முகத்தில் பளிச்சிட்டன. அரங்கில் நிகழ்ச்சி முடிந்ததும் அவையினர் தம் அபிப்பிராயங்களைமுகமனுக்குக் கூறாமல் சத்திய அடிப்படையில் கூறும் பண்பு கலைவளர உரமிடும் பண்பாகும். நாடகத்தில் ஒரு பங்கினரே அவையோர். 'கோடை' நாடகம் பார்த்த ரசிகர்கள் பண்பட்ட உயர்தர ரசிகர்கள் என்பதைப் பலவிதத்திலும் வலியுறுத்திவிட்டனர். ரசிகர்கள் தரத்தை உயர்த்திடவல்ல நாடகங்கள் உருவாகட்டும்! ரசிகர் பணபும் இத்துறைக்கு உரமிட்டு நிற்கட்டும்!

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

# ஹோமியோபதியும் புற்றுநோயும்!

ஹோமியோபதியை உலகிற்கு அளித்தமேதை டாக்டர் சாமுவேல் ஹனிமான் மற்றைய வைத்தியர்களைப்போலநோய்களுக்கு வைத்தியம்செய்யாமல் நோயாளர்களுக்கு வைத்தியம் செய்யுங்கள் என்று அன்றே கூறினர். அதாவது புற்றுநோயிற்கு வைத்தியம்செய்யாமல் புற்றுநோய் வந்த நோயாளிக்கு சிகிச்சை அளியுங்கள் என்பது தான் அவர் கூற்று. மனிதனின் விருப்பு வெறுப்புக்கள், நடை உடை, சுற்றுடல் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுதல் ஆகியவற்றில் வித்தியாசம் காணக்கூடியதாகஇருக்கிறது. ஆகவே அவன் நோய்வாய்ப்படும்போது அறிகுறிகளும் நோயின் தன்மையும் மாறுபடுகின்றன. இம்மாறுபாடுகள் அறிகுறிகள் ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஒரு மருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு முறையைக் கண்டுபிடித்து பக்கவின் துயர்துடைக்க சரியான பாதையைக் காட்டிய மையால்தான் விஞ்ஞானம் முன்னேறிய நவீன யுகத்திலும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்து உலகின் சகலநாடுகளிலும் ஹோமியோபதி சிகிச்சைமுறை மேற்பதுதான் சாலச்சிறந்தது மிகவும் அரிதாகக் காணப்பட்ட புற்றுநோய் இன்று மிகவும் சாதாரணமானதாக ஒரு குடும்பத்தில் அல்லது ஒருவனது உற்றார் உறவினரில் ஒருவரையென்ருலும் பலிகொண்டிருக்கும் பரிதாபக்காட்சியை அன்றாடம் காணக்கூடியதாக இருக்கின்றது.



டாக்டர் ரி. பரமசிவம்

[இலங்கை - அரச ஹோமியோபதி சபை உறுப்பினர்]

புற்றுநோய்க்கும் இதுதான் மருந்து எனப் பிரிந்துக்கூற முடியாது மற்றைய நோய்களைப்போலவே நோயின் அறிகுறுகளுடன், நோயாளியின் தனித்துவமும் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட்டு அதன் பின்னர்தான் அந்த நோயாளிக்குப் பொருத்தமான மருந்தைக் கொடுக்கவேண்டும்.

புற்றுநோய்க்கு ஹோமியோபதியில் பின்வரும் மருந்துகள் உள்ளன. ஆனல் அறிகுறிகளின் அடிப்படையிலேயே சரியான மருந்து எது என்று தேர்ந்தெடுக்கப்படவேண்டும். Carcinosen, Arsenicum Album, Condurungo Conium, Kali Cyanatum, Lachesis, Silicea, Suphur. Hydrastis, Phytolacca, Thuja, Ruta, Sanguinaria Calcarea iod, Phosphorus, Euphrasia, Iscador ஆகிய மருந்துகள் புற்றுநோய் சிகிச்சைக்கு முக்கியமானவையாகும்;

உணவும் புற்றுநோயும் என்றதலைப்பில் 1978ம்ஆண்டு தை மாதம் வெளிவந்த Readers Digest என்ற புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் நவீன யுகத்தில் உணவு உற்பத்தியில் செயற்கை உரங்களும், கிருமிநாசினிகளும் உபயோகிக்கப்படுவதால் புற்றுநோய் கூடுதலாக ஏற்படுகின்றது எனப் போடப்பட்டிருக்கின்றது. கிராமத்தில் வசிப்பவர்களைவிட நகரத்தில் வசிப்பவர்கள் கூடுதலாக இந்நோயினும்பீடிக்கப்படுகிருர்கள். நாம்

[9-ம் பக்கம் பார்க்க]

மருந்துகளினல் நோய் அகற்றப்படுகிறது. ஆங்கில வைத்தியத்தில் தலையிடி, சுரத்திற்கு அஸ்பிரின் மாத்திரை கொடுக்கப்படுவதுபோல ஹோமியோபதியில் புற்றுநோய்க்கு இது தான் மருந்து என ஒரு மருந்தின் பெயரை மாத்திரம் குறிப்பிடமுடியாது. சிலநேரங்களில் ஒரு மருந்து தனது வேலையைச் செய்து முடித்ததும். வேறு அறிகுறிகள் குறிக்கப்படும்போது வேறு மருந்தும் கொடுக்கப்பட வேண்டும். ஆகவே சில சந்தர்ப்பங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட மருந்துகளும் ஒரு நோயாளிக்குத் தேவைப்படலாம்.

புற்று நோயில் Epithelial கலங்கள் பெருகிப் பிரிந்து இழையங்களிடையே ஊடுவிச் செல்கின்றன. அங்கு தரித்து மேலும் பிரிந்து பிரிந்து வளர்ச்சியடைந்து தொடுப்பிழையங்களை உறுத்த ஆரம்பிக்கின்றன. இவையிரண்டும் துரித கதியில் நடைபெறும்போது திரட்சி காணப்படும் மாற்றங்களைத் தாக்கும்போது Stroma தடித்துச் சுருங்குவதால் அவை சுருக்கமடைந்து காணப்படுகின்றன. புற்றுநோயில் Glandular, Colloid, Squamous, Basal cell, Carcinoma எனப் பலவகையுண்டு. இக்கலங்களை மாறுபாடு அடையச்செய்வது என்ன! என்ற கேள்விக்கு சரியானவிடை கிடைத்தால் அதைத் தடுபபதற்கு வழிவகைகள் காணப்பட்டால் (தடுப்பு மருந்துகள்) அது ஒரு வரப்பிரசாதம்தான்.

ஹோமியோபதியில் அறிகுறிகளின் அடிப்படையில்தான் புற்றுநோய் உட்பட சகல நோய்களுக்கும தவறு நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அரசாங்கம் ஹோமியோபதியை அங்கீகரித்துள்ள இவ்வேளையில்இலங்கைமக்கள் இவ்வைத்தியத்தின் மேன்மையை உணர்ந்து ஆரோக்கியமானவர்களாக வாழ சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து அதன்படிசெல்லவேண்டும். எமது தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமான் அவர்கள் ஆங்கில வைத்திய மேதையாக இருந்தும் இப்புது வைத்திய கொள்ளப்படுகிறது. உலகிலுள்ள சகல மக்களும் ஹோமியோபதி மருந்துகளை மாத்திரம் உட்கொள்வதுடன் சகல வைத்தியர்களும் ஹோமியோபதி மருந்துகளை மாத்திரம் கொடுத்துவந்தால் நோய்களினல் மரணம் எதுவும் ஏற்படாது என உறுதியாகக்கூறியுள்ளார்கள்.

ஆகவேதான் சிறுவயதிலிருந்தே ஹோமியோபதி மருந்துகளை மாத்திரம் உட்கொண்டு வரும் ஒருவனுக்கு புற்றுநோய் ஏற்படஇடமில்லையென அறுதியாகக் கூறமுடியும். புற்றுநோய்க்கு சிகிச்சையைப்பற்றி ஆராயுமுன்னர் புற்றுநோய் ஏற்படுவதற்கான சூழ்நிலைகளை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்

# எழுதுபவருக்கு தெளிவு .....

[5-ம பக்கத் தொடர்ச்சி]

குறைவு. இதனை நீக்க கைலாசபதி போன்றவர்கள் தேவை என்பதுதான் அது.

திரு. ஜெகநாதன், திரு கைலாசபதிக்கு முக்கியத்துவம் அளிப்பது தவறல்ல. அவர் அளிக்கும் முக்கியத்துவம் அதேதுறையில் - அதே சந்தர்ப்பத்தில் பணியாற்றிய வேறு பலரை மறைத்துவிடுவது முற்றிலும் தவருனது. கண்டிக்கப்படவேண்டியது பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரை கார்த்திகேசு சிவத்தம்பி, சு. வித்தியானந்தன், பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக இல்லாதபோதும் மௌன குரு, பாலேந்திரா போன்ரேர் ஆற்றிய, ஆற்றிவரும் சேவை கைலாசபதிக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல, இதை ஒப்புக்கொள்ளாதவரது இலக்கியப்பார்வை அடித்தளத்திலேயே குறைபாடுடையது. மேலும் 'தேசிய இலக்கியம், என்ற கோஷமும் அதன் விளைவான புத்துணர்வும் உருவாவதற்கு அக்காலக்கட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் அதனது நண்பர்களும் கூட்டாகப் பொறுப்பேற்பார்களேயன்றி தனி ஒருவர் அங்கு முதன்மைப்படுத்தப்படமுடியாது இரு கலாநிதிகளிலும். இளங்கீரன், டொமினிக்ஜீவா, ஏ ஜே. கே, எஸ். பொ. (இப்பெயர் குறிப்பிடப்படுவது குழப்பத்தை ஏற்படுத்துவதபோற்ருேன் றலாம்) பிரேம் ஜி எச் எம் பி ஆகியோரிலும் பாரபட சமின்றிச் சுமத்தபபடவேண்டிய பெருமையாகும் அவர்களது சேவையைக் குறைத்து மறைத்துவிடுவது எம்மளவில் ஆத்மவேதனையை உருவாக்குவதொன்ருகும்.

கட்டுரையின் போக்கிலேயே புதுக்கவிதையை இழிவுபடுத்தும்தன்மையிலமைந்த கருத்து வெளியிடப்படுறது. 'எல்லோரையும் தொற்றிக்கொள்ளும் புதுக்கவிதைப் பைத்தியமும் இராஜரத்தைத் தீண்டாமல் இல்லை' என்று எழுதப்பட்டிருப்பது; 'புதுக்கவிதை - ஒரு மாயை, அது முட்டாள்தனமானது' என்ற கருத்துத்தோற்றத்துக்கே வழிவகுக்கிறது. கட்டுரையை நன்கவதானிக்கும் போது இக்கருத்து வலுப்பதாக உள்ளது. இது 'கவிதை பற்றிய தெளிவு இவருக்கு கிடையாதா? என்றே எண்ண வைக்கும்! மரபுக் கவிதை காதின்மூலம் ஒலி வடிவை மனதில் தோற்றுவதன்மூலம் கவிதையாகிறது. புதுக்கவிதை அதனது 'ஒலி உணர்வை' கண்மூலம் தோற்றுவிக்கிறது. இதனைப் புரிந்துகொள்ளாமல் எழுதப்படும் சில காகிதக் கிறுக்கல்களை மட்டுமேநோக்கி புதுக்கவிதை இலக்கியத்தரமற்றது என்ற கருத்தை எடுத்துரைப்பதுபரிதாபகரமானது. அழகியல் பூரணமாக அமையுமாயின் கவிதை நாலுவரிகளுக்குள்ளும் அடங்கலாம்; நானூறுவரிகட்கப்பாலும் விரியலாம் அது எழுதுபவனைப் பொறுத்தது விடையத்தைப் பொறுத்தது இவருக்குச்சுருக்கமாக 'புனைகதை' மட்டுமே இலக்கியமல்ல எனத் தெளிவாக்கூறலாம்

- ஸ்ரீனிவாசன்

## ஊனமுற்றோருக்கு உதவியும் புனர்வாழ்வு இல்லங்களும் அவசியம்

# பிச்சை வேண்டாம்; மகிழ்வுடன் வாழ வழி காட்டுங்கள்

இன்று உலக வலதுகுறைந்தோர் தினமாகும். இதை யொட்டி வேலணையைச் சேர்ந்த ம. தனிநாயகம் எழுதியுள்ள இந்த உருக்கமான கட்டுரை வெளிவருகின்றது. வலது குறைந்தவர்களுக்காக நமது சமூகம் எவ்வளவோ செய்ய முடியும். சிந்திப்போமா?

வேலணை ம. தனிநாயகம்

ஊனமுற்றவர்களும் மனிதர்களே! அங்கம் குறைந்த ஒருவன் உங்களில் எவரையும் போல ஒரு மனிதன் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

'அங்கங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

வலது குறைந்தவர்கள் யாரென்றால் தங்களுடைய அன்றாட கருமங்களை வேறு மனிதரின் அல்லது உபகரணங்களினது உதவி இல்லாமல் செய்யமுடியாதவர்கள். அவர்களால் சில வேலைகளில் ஊதியத்திற்கு உழைப்பதற்கும் முடியாமல் இருக்கலாம்.

சென்ற காலத்தில் கூட்டுக் குடும்பங்கள் இருந்தன. வயது போனவர்களும் நோயாளிகளும் குடும்பத்தின் பொறுப்பில் இருந்தார்கள். அக்குடும்பத்தினால், ஒரு சிறிது ஊனமுற்றவரும் உணவு ஊட்டப்பட்டு, உடை உடுக்கப்பட்டு, தேவையில்லாமலே உதவி செய்யப்பட்டு இருந்தார். ஆனால் இப்பொழுது கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து தனிக் குடும்பங்கள் ஆகின்றன. இதனால் வலது குறைந்தவர்கள் தேவையான உதவியற்று விடப்படுகின்றனர். அவர்கள் தங்கள் உயிரை உடலுடன் ஒட்டிவைப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள்.

நெடுங்காலமாக வலது குறைந்தவர்களை, இச்சமுதாயம், உதவியற்றவர்களாகவும், தங்களுடைய வாழ்க்கையை பிச்சை எடுத்தும் மற்றவர்களின் இரக்கத்தில் தங்கியும் வாழவேண்டியவர்கள் என்றும் நடத்திவந்தது.

### பிச்சை வேண்டாம்

பரந்தனில் நான் ஒரு ஒழுங்கையால் சக்கர நாற்காலியில் செல்லும்போது என்னை ஓர் அம்மையார் சந்தித்தார். அவர் என்னைக் கண்டவுடனேயே இருபது சதம் பிச்சையாகத் தந்தார். நான் மறுத்தேன். உடனே தன்னுடைய சேலையிலிருந்த முடிச்சை அவிழ்த்து, அதிலிருந்து ஐம்பது சதம் தந்தார். அவர் தான் தந்த இருபது சதத்தில் நான் திருப்திப்படவில்லை என்று எண்ணினார். அவருக்கு நான் பிச்சை எடுக்க வரவில்லை என்றும், ஊரைச்சுற்றிப் பார்க்க வந்தேன் என்றும் கூறி அவரை விட்டு ஓடி வந்துவிட்டேன். 'எங்களுக்குத் தேவை தருணம், தருமம் அல்ல. எங்களை பிச்சைப் பாத்திரங்களாக நடத்துவதை நாங்கள் விரும்பவில்லை.

ஊனமுற்றவர்கள் விசேஷமாக புனருத்தாரண இல்லங்களில் உள்ளவர்கள், தாங்கள் கற்றவற்றையும் அனுபவத்தில் அறிந்தவற்றையும் மற்றவர்களுக்குக் கூறி, இயற்கையாகவே உதவுகிறார்கள். மற்றவர்கள் ஒரு குறிக்கோளுடன் வாழுவதற்கு அவர்கள் உதாரண புருஷர்களாக இருந்து உதவுகிறார்கள்,

### குறிக்கோள் உள்ள வாழ்க்கை

புனருத்தாரணத்தின் இறுதி இலக்கு மனித வாழ்க்கையை எவ்வளவு கருத்துடையதாக்க முடியுமோ அவ்வளவுக்கு ஆக்குவதுதான். ஒரு கருத்துடைய வாழ்க்கை என்பது ஒரு குறிக்கோள் உள்ள வாழ்க்கையாகும், அநேகமாக எல்லா வலது குறைந்தவர்களும் தங்களுடைய 'நீண்ட' நாட்களை ஒரு கருமமும் செய்யாமல் கழிக்கின்றார்கள். அவர்கள் உபயோகமற்ற, கருத்தற்ற வாழ்க்கையை வாழுகின்றார்கள், ஒரு மனிதன் சந்தோஷமாகவும் மனச்சாந்தியுடனும் வாழவேண்டுமாயின், பிறர் சந்தோஷமாக வாழ்வதற்கு உதவிசெய்தல் மாத்திரம் ஒன்றே வழியாகும் என்பது என் எண்ணம். இது சரியில்லையா? மிகவும் ஊனமுற்றவர்கள் சந்தோஷமாக வாழக்கூடியதாய் இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம் என்று கூறினால் பின் அவர்கள் சுய உணர்வையும் இந்தச்சாந்தியுள்ள வாழ்க்கையும் சேவையினால் அடைவதற்கு உரிமையுள்ளவர்கள். இதற்காக அவர்களுக்கு முடிந்தளவு எல்லாச் சந்தர்ப்பங்களையும்கொடுப்பது எங்கள் கடமையாகும்.

இது கூட்டுவாழ்க்கைக்கும் முக்கியமானது ஊனமுற்றவர்களும் அல்லாதவர்களும் ஒருவரை ஒருவர் பாராட்டுவதனால் கூட்டுவாழ்க்கையை வளர்க்கலாம், மற்றவர்களு

[9ம் பக்கம் பார்க்க]

# தசாம்ச எண்சோதிடத்தில் உங்கள் வார பலன்

18-3-1979 முதல் 24-3-1979 வரையுமுள்ள காலபலன்கள்.

இப்பலன்கள் பிறந்ததேதி எண்ணை (அதிர்ஷ்டஎண்) கொண்டே பார்க்கவேண்டியது. ஆண்டு, மாதம், தேதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணுக்கும் (விதிஎண்) பொருந்தும். பெயர்எண், மற்றும் எண்களும் சரிவர அமையுமானால் இப்பலன்கள் கூடுதலாகவே அமையும்.

இவ்வாரத்துக்குரிய பூர்வ ஜெனமத்தொடர்பு எண்-9, விதி எண்-2, அதிர்ஷ்டஎண்-9 ஊழ் எண்-8, வினைஎண்-3, நியமஎண்-1 ஆக அமைகின்றது.

இந்தவாரம் பூர்வஜென்மத் தொடர்புஎண்-9ஆக அதிர்ஷ்ட எண்ணும்-9 ஆவதால் இவ்வாரம் உலகியலில் ஓர் எதிர்பாராத முக்கிய சம்பவம் நடக்கக்கூடும். இவ்வாரம்சனிக்கிழமையில் விதிஎண்-8 ஆக இருப்பதால்எதிர்பாராதவிபத்துக்கள், வன்செயல்கள் ஏற்பட இடமுண்டாகலாம். வாகன சாரதிகள் கூடிய அவதானம் வேண்டும், உலக அரங்கிலும் சனிக்கிழமை முக்கியத்துவம் பெறும்.

### எண் 1

தேதி 1,10,19,28ஆகியதேதிகளில் பிறந்தவர்களின் எண் ஒன்றாகும். இவர்களுக்கு இந்த வாரம் ஓர் அமைதியான மந்த நிலையைக் குறிக்கிறது ஏமாற்றத்தினால் தாக்கப்படலாம், கடன்கொடுத்தால் திரும்பப் பெறமுடியாது போய்விடும், பெரும் பிரயாணங்கள் மேற்கொள்ளுதல் நல்லதல்ல. திங்கட்கிழமை எதிர்பாராதவிபத்துக்கள் ஏற்படலாம். அவதானமாக நடந்துகொள்ளவும்

### எண் 2

தேதி 2, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் இரண்டாகும். இவர்களுக்கு இந்த வாரம்கஷ்டங்கள் நீங்கும். பொருள்வரவு கூடுதலாக இருக்கும். நிம்மதியான விடுதலைமனப்பான்மை மனதில் தோன்றும். சிலருக்கு விஷப்பயம் ஏற்படலாம்- அதிகாரநிலையான உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு அதிகார ஆணவம்கூடுதலாக இருக்கும் அப்படிப்பட்டவர்களுக்கு செவ்வாய்க்கிழமை மிகவும் கோபமூட்டக்கூடிய சம்பவங்கள் ஏற்படலாம்.

### எண் 3

தேதி 3, 12, 21, 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் மூன்றாகும். இவர்களுக்கு இந்தவாரம் முயற்சியில் ஊக்கம் ஏற்படும். தன் சந்தோஷத்திலும் களிப்பிலும்தான் இருக்க இவர்களுடைய புகழைப், பொருளை பிறர் தட்டிக் கொண்டுபோகக்கூடும். தேக ஆரோக்கியமும் பாதிப்படையலாம். சருமநோய்கள் ஏற்பட இடமுண்டாகலாம். வியாழன், சனிக்கிழமைகளை அவதானமாகக் கழிக்கவும்.

### எண் 4

தேதி 4,13,22,31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் நான்காகும். இவர்களுக்கு இந்த வாரம் மனக்களிப்பான காரியங்கள ஏற்படலாம். பொருள முடை காணப்படினும் மனக்களிப்பு கூடுதலாக இருக்கும், இந்த எண்காரர் அனேகமாக இவ்வாரம் களியாட்டங்கள, சூதுகளில்பொழுதைக் கூடுதலாகக் கழிப்பா, செவ்வாய், வியாழன் இவர்களுக்கு மிகவும் கெடுதியான வாரமாக இருக்கும்-

### எண் 5

தேதி 5,14,23 ஆகியதேதிகளில் பிறந்தவர்களின்எண் ஐந்தாகும்' இவர்களுக்கு இந்த வாரம் நன்மையான வாரமாக இருக்கும், வாரமுற்பகுதியிலும் பார்க்க பிற்பகுதி கூடிய நன்மையளிக்கும். நிரந்தரமற்ற இடத்தில் தொழிலில் இருந்தசிலர் நிரந்தர தானத்தைப் பெறுவர். குடிப்பழக்கம், லாகிரிவஸ்து பாவிக்கும் குணமுடையவர்கள் வெள்ளிக்கிழமை அவதானமாக இருக்கவும்- பெண்களுடன் சம்பந்தப்பட்ட கஷ்டங்கள் ஏற்படலாம்;

### எண் 6

தேதி 6,15,24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் ஆறாகும்- இவர்களுக்கு இந்த வாரம் யோசனைகூடிய வாரமாக இருக்கின்றது, உத்தியோக உடைஅணியும் உத்தியோகங்களில் இருப்பவர்கள் கூடியளவு பொறுமையைக் கடைப்பிடித்தல் மிகவும் நன்று. சொந்தத்தொழில் செய்பவர்களுக்குத் தொழிலில் கூடிய பிரயாசைஏற்படும், செலவினங்களும் கூடுதலாக இருக்கும். உடல்நலமும் பாதிக்கப்படக்கூடும், உத்தியோகத்தர்கள் சனிக்கிழமையை அவதானமாகக் கழிக்கவும்-

### எண் 7

தேதி 7,16,25 ஆகியதேதிகளில் பிறந்தவர்களின்எண் ஏழு ஆகும். இவர்களுக்கு இந்த வாரம் தொழில்முறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும், பொருள் வரவுமுண்டு. செலவினங்களும்கூடுதலாகவே இருக்கும், குடும்பத்தில் நன்மையான காரியங்கள நடைபெறலாம். மது மங்கை மோகப் பழக்கங்களில் ஈடுபடுபவர்களுக்கு வாரக்கடைசி வீண் தொந்தரவுகளும், பொருட்செலவும் ஏற்படஇடமுண்டாகும்;

### எண் 8

தேதி 8, 17,26 ஆகியதேதிகளில் பிறந்தவர்களின் எண் எட்டாகும். இவர்களுக்கு இந்தவாரம் நண்பர்களால் பெரும் நஷ்டங்கள ஏற்படலாம். தீயவழிகளில் பணம் சம்பாதிப்பவர்கள நண்பர்களை விரோதித்துக் கொள்வார்கள். உத்தியோகத்தர்களுக்குச் சந்தோரில் கடும் உழைப்புகள, பொறுப்புகள, வீண் சச்சரவுகள ஏற்படலாம், குடும்பநலம் பாதிப்படையும். பெரும் தொழில் புரிபவர்கள மிகவும் விழிப்புடனிருக்கவேண்டும். வயிற்றுக்கோளாறு சம்பந்தமானநோய் உண்டாகலாம். சனிக்கிழமை எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படலாம். வாகன சாரதிகள மிகவும் அவதானமாக இருத்தல்வேண்டும்.

### எண் 9

தேதி 9,18,27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண் ஒன்பதாகும். இவர்களுக்கு இந்தவாரம்மன அமைதியாதிப்படையும், வீண்பழிகள ஏற்படலாம், பிதாவழி துக்க சம்பவங்கள ஏற்படலாம், பொருளாதாரப்பிரச்னை சுமூகமாயிருக்கும். பொருளவரவுண்டு பொறுமையால் நன்மை விளையக்கூடும். உணவு விஷயத்தில் கவனம்வேண்டும்; சுயநலமில்லாவிட்டால் நன்மை ஏற்படும்; திங்கள் - சனிக்கிழமைகளில் முக்கியமான கருமங்களில் இறங்கவேண்டாம; கூடியவரை கோபத்தையும் பிடிவாதத்தையும் குறைத்துக்கொள்ளவும்

'வரசி'

சி. அ. செல்வத்துரை,
கூளாவடி,
ஆனைக்கோட்டை.


## அகில இந்திய வானொலி ஒலிபரப்புகள்

இலங்கைக்கும் இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகளுக்கும் அகில இந்திய வானொலி ஒலிபரப்பும் நிகழ்ச்சிகளை இலங்கை நேயர்கள் பின்வரும் அலைவரிசைகளில் கேட்கலாம்.

| சேவை | நேரம் | கிலோ ஹேர்ட்ஸ் | அலைவரிசை |
|---|---|---|---|
| சிங்களம் | 1815-1845 | 17620<br>15430 | 25.82<br>19.44 |
| தமிழ் | 0530-0615 | 9912<br>11310<br>1134 | 30.27<br>25.40<br>264.5 |
| ஆங்கிலம் | 0415-0645 | 7215<br>9535<br>11770<br>15110 | 41.58<br>31.28<br>25.50<br>19.85 |

இந்நிகழ்ச்சிகளின் ஓசைத் தெளிவு உள்ளடக்கம் ஆகியன பற்றி நேயர்கள் தங்கள் கருத்துக்களை பணிப்பாளர், வெளிநாட்டுச் சேவைகள், அகில இந்திய வானொலி, தபால் பெட்டி இலக்கம் 500, புது டெல்லி-110001, இந்தியா என்ற முகவரிக்கு நேரடியாக எழுதலாம், அல்லது இந்திய உயர் ஸ்தானிகர்காரியாலயம், தகவற் பகுதி, தபால் பெட்டி இலக்கம் 882, கொழும்பு 1, இலங்கை என்ற முகவரிக்கு எழுதலாம்.

Grant K 68 916

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

# பசியைப் போக்கி பஞ்சத்தை விரட்டியடிக்க...

கேள்வி:- இன்று பெரும்பாலான பெண்களை கலை, விஞ்ஞானம், மருத்துவம், சட்டம் போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் நீங்கள மட்டும் விவசாயத்துறையைத் தேர்ந்தெடுத்ததற்கானகாரணம் என்ன?

பதில்:- கலை, விஞ்ஞானம், மருத்துவம், சட்டம், பொறியியல், இவற்றிற்கெல்லாம் மூலாதாரமாக உள்ளது விவசாயம். விவசாயம் நாட்டின் பஞ்சத்தை, பசிப்பிணியை அகற்றிப் பொருளாதாரசுபீட்சத்தை வளர்க்கிறது, ஆகவே எமது மத்தியிலே ஒரு நவீன

## மாணவர்-ஆசிரியர் சந்திப்பு

விவசாய சமுதாயத்தை] உருவாக்கவேண்டியது எம்போன்றோரின கடமை! இது எனது வாழ்க்கையின் இலட்சியம். இது ஒருபுறமிருக்க, நீர்கூறிய ஏனைய துறைகளில் பட்டதாரிகள் பலர் நமது நாட்டிலே வேலையில்லாப் பிரச்னைக்கு ஆளாகியுள்ளனர். பலர் பிற நாடுகளுக்கு வேலைதேடிச்சென்றுள்ளனர். இந்தநிலை விவசாயக்கல்வி கற்றவர்களுக்கு ஏற்படாது. விவசாயக்கல்வியில் தேர்ச்சிபெற்றவர்களுக்குஅரசு வேலை கொடுக்காவிட்டாலும், வேலையில்லாப்பிரச்னை அவர்களுக்கு இருக்காது. ஆசிரியத்தொழில் கிடைக்காவிடினும் எனது விவசாயக்கல்வி வீட்டிலிருந்தே விவசாயத்தில் முழுநேரப்பணி

விரிவான பயிற்சியளிக்கிறார்கள. பயிற்சிபெறும்போது பயிர்ச்செய்கையிலும் பார்க்க, ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்கலைகளிலேயே கூடிய அக்கறை செலுத்தினேன். பெண்களாகியநாம் வீட்டிலிருக்கும்போது இவற்றை வளர்ப்பதன்மூலம் பயனடையலாம் என்றநோக்குடனே இவற்றில் அக்கறை காண்பித்தேன்.

கே:- உங்கள மாணவர்கள இங்கு அதிக அக்கறைகாட்டுகிறார்களா?

யாக ஈடுபட எனக்கு வசதியளித்திருக்கும் இந்த நிலையில் எனது குறிக்கோளில் தவறியிருக்க முடியாதுதானே.

கே:- தாங்கள கற்ற விவசாயக்கல்வியில் வேறு என்னென்ன அடங்கியுள்ளது?-

ப:- விவசாயம் தனியே பயிர்ச்செய்கையை மட்டும் குறிக்கவில்லை. ஆடு-மாடு-கோழி வளர்ப்பு ஆகியனவும் அடங்கும், இவைசம்பந்தமாக

ப:- ஆம் எனது மாணவர்கள ஏனைய பாடங்களிலும் பார்க்க விவசாயத்தில் அதிக கவனம் செலுத்துகிறார்கள. காரணம் எமது மகாவித்தியாலயம் விவசாயிகள மத்தியில் அமைந்துள்ளது. இங்கு மாணவர் பெறும் பயிற்சியை உடனுக்குடன் பிரயோகப்படுத்தக்கூடியதாக உள்ளது. நகரப் பாடசாலைகளில் இப்படியான வசதி இருக்கமுடியாது. எமது மாணவர் விவசாயிகளாகிய தமது பெற்றோருக்கு உறுதுணையாக உள்ளனர். சூழலுக்கேற்ப அவர்கள் விவசாயக்கல்வியில் நாட்டம் செலுத்துவதில்ஆச்சரியமில்லையே. மேலும் இவர்களின் எதிர்காலம் ஒளிமயமாகும் என்பதிலும் ஐயமில்லை.

கே:- 'பாம்பின் காலைப் பாம்பறியுமல்லவா' பெண்கள விவசாயத்துறையில் ஈடுபடுவது குறித்து விவசாயத்துறையில்ஈடுபட்ட உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்?

ப:- ஆண்களைவிடப் பெண்களே விவசாயத்துறையில் அதிக கவனம்செலுத்தவேண்டும் என்பது என் கருத்து. விவசாயம் என்றதும் ஏர் பிடித்து உழவேண்டும் என்பதல்ல. இது போன்ற கடின வேலைகளுக்கு விஞ்ஞானம் இயந்திரசாதனங்கள உதவியுள்ளது. பெண்கள் வீட்டுத்தோட்டத்தின்மூலம் வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் கோழி, ஆடு, மாட்டுப்பண்ணைகளை நிறுவி தமது வீட்டின் பொருளாதார நிலையை உயர்த்தலாம். சுவிற்சர்லாந்து, ஒல்லாந்து, டென்மார்க், பெல்ஜியம் போன்ற விவசாயநாடுகளில் பெண்களே விவசாயத்தில் பெரிதும் ஈடுபடுகிறார்கள். இந்தநிலையில் நமதுநாட்டுப் பெண்களும் இதில் ஈடுபடுவதில் தவறில்லை.

- விவசாயக்கல்வி வேலையில்லாப் பிரச்னையை ஒழித்து வேலைவாய்ப் பளிக்கிறது.
- பசியைப்போக்கி பஞ்சத்தை விரட்டியடிக்கிறது.
- நாட்டை வளம்படுத்தி பொருளாதார சுபீட்சத்தை கொடுக்கிறது,

இவ்வாறு தெரிவித்து பல எடுத்துக் காட்டுகளையும் விளக்கிகூறினார் மட்டுவில் மகாவித்தியாலய விவசாய போதனாசிரியை திருமதி பவளம் முத்தையா. இவர் குண்டசாலை விவசாயக்கல்லூரியில் விவசாயப் பயிற்சி பெற்றவர்.

ஆசிரியை: திருமதி பவளம் முத்தையா (விவசாய டிப்ளோமா)

செவ்வி; செல்வி தேன்மொழி அருளம்பலம் (மட்டுவில் மகா வித்தியாலயம்)

## 'இப்படியும் ஒரு நண்பன்'

கடந்த வாரம் 'மாணவர் எண்ணம்' பகுதியில் வெளிவந்த "இப்படியும் ஒரு நண்பன்' சிறுகதையை சென்னை நந்தனம் ஆர்ட்ஸ் கல்லூரி பி. யூ ஸி. வகுப்பில் கற்றுவரும் சிவப்பிரகாசபிள்ளை சிவநேசன் என்ற மாணவர் எழுதியிருந்தார் இவர் யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்தவர்.

கண்டோஸ்

# ஜயந்தி

விடுதி நோக்கி என்னைத் தன் தோள்மீது சுமந்து ஓடிய அசுவத்தாமன் விடுதி வாயில் சேர்ந்ததுமே நான் வண்டி நீத்து மெல்லஇறங்கவும் நேரே என் ஐாகை அறைக்கு ஏகவும் கூடநின்று பெரிதும் உதவினர். அந்தமுதியோனின் பெயரை தாமரைக் கன்னியர் தமக்குள்ளாகப் பேசிக்கொண்டதிலிருந்து தெரிந்துகொண்டிருந்தேனுதலின், "சிறிதே நில்லுகொள் ராமன்; உனக்கு வண்டில்சலார் கொடுக்கவேண்டுமல்லவா?" என்று என் சட்டைப்பையினுள் கைவிட்டு பணத்தை எடுத்து நீட்டிய போது, 'இழம்என்னிடம்எதுவும்வாங்கமறுத்துவந்தவழியே திரும்பிற்று நான் திரும்பவும் உப்பிட்டழைத்தேன். ஒருக்கால் மீளத்தலைகாட்டி 'சிறிது நாளி கழித்து மறுகாலும் ஒருக்கால் வந்து பார்க்கிறேன் சாமி! ஜுரமடித்தால் மருத்துவ மனைக்குக் கூட்டிவரும்படி அங்கு வேலை பார்க்கப்போகிற பொண்ணு என்னிடம் சொல்லி வைச்சிட்டுப்போயிருக்கிறாங்க. இரா முழுக்க நான் இங்கே தான் சுத்திக்கிட்டிருப்பேன், நீங்க ஏதுக்கும் மனசை அலட்டிக்கொள்ளாமல் படுத்துக் கண்ணுறங்குங்க!' என்றிட்டான்.

வயதாகிக் கிழடுதட்டிப் போயிருப்பினும் வடக்கன் காளை மிடுக்கு. கடின உடலுழைப்பில் அசாத்திய தன்னம்பிக்கை இன்னமும் கணீரட்டது அந்தாளு பேச்சிலே. 'ஆரது ஜயந்தியா சொன்னு?' என்று பின்னும் உசாவி வினவவும், 'ஆமாங்க அவுங்களாய்த்தான் இருக்கணும். பிராமணப் பொண்ணுட்டம் செக்கச் செவேலென்று மூக்கும் முழியுமாகத் தோற்றி நின்னிட்டிருப்பாங்களே...!' என்று சொல்லிவிட்டு அதற்குமேல் அங்கு எதுவும் நிற்கப்பொறுமையாற்றாராய் அசுவராமன் ஓடியே போய்விட்டான்.

ஜுரம் தணிந்திருந்தது, ஆனால் உறக்கம் பிடிக்காமலே 'உடற்கூற்று' கட்டிலில் உருண்டு புரண்டு கிடந்தது. இரண்டேஇரண்டு வில்லைமாத்திரைகளுடனே சுருக்கமாக முடிந்துவிட்ட மருத்துவ சிகிச்சை. ஆனால் என்ன ஆழத்துக்குப் பாய்ந்தோடி உடலையும் மனத்தையும்என்னமாய்ப் போட்டு உலுப்பி தூக்கி எறிந்து பந்தாடுகிறது! மாலை அரிதாக இன்புற்ற அந்த

அ. செ. மு.

ஸ்பரிச சுகத்தின் தோஷம் தானோ! எண்ணங்கள் நினைவுகள் நூறாயிரமாக அலை அலையாய் ஓ...ஹோ! என்ற பேரிரைச்சலுடனே கொந்தளித்து எழும்...

"ராமன் உன் முழுப்பெயர் என்னப்பா? கோதண்டராமனா சேதுராமனா, ஜானகிராமனா? அதுவுமில்லையென்றால்...?'- மனங்கலந்தாற்போல் குலவி மகிழ நினைத்ததை யேலே சொல்லத் தயங்கியதை நுண்ணிதாக அவதானித்துக்கிரகித்துக்கொண்டு அதற்கு இங்கிதமாக. தானும் பதிலிறுத்து என்னை மகிழ்விக்க விரும்பினாற்போல்முழுப்பெயரே அதுதானுங்க! 'சாப்பாட்டுராமன்' என்றே வேண்டுமானால்வைத்துக் கூப்பிடுங்களேன். பிரியமாயிருந்தால்அதற்மேல் சோத்துராமன் என்று சொல்லிக்கொள்ளுங்கோ! எல்லாமே எனக்கு இஷ்டமான பெயர் வானுங்க, என் முன்னோர் ஆதி முதல்லே அதே பட்டிகுத்திக்கொண்டுதான் இப்பூமியிலே கால்வைத்தாங்க அவுங்கட அதே வம்சாவழியிலே தேயிலைக் காட்டிலே பிறந்தவனுங்க. நம்மாக்கள் இன்னமும் தோட்டத்திலே வேலை பார்க்கிறாங்க!"

ரிக்ஷோ ராமனை மனத்திரைக்கு இழுத்துக்குழவி இப்படி ஒரு நிமிடம் குலவி உரையாடினாற்போல் அலட்டிக்கொண்டிறேன்.

கள்ளிருக்கும் கூந்தல் ஜானகி
யைக் கரந்த காதல்
இன்னும்
உள்ளிருக்கும் என்று தேடி
யதோ ஒருவன் வாளி

-வாய்க்குள்ளே மெல்லப்பாடி கம்பன் கவிநயம் மகிழ்வன் மற்றொருபோது.

"அம்மா பொண்ணுமே, அவ ஜயந்தி! ரிக்ஷோ ராமனின் கண்கள் நன்றாகத்தான் கணிப்பிட்டு ஆளை எடைபோட்டிருக்கின்றன! செக்கச்செவேரென்று இருக்கிறு. குங்குமம் வர்ணமாகப் பொலியும் மேனி அழகு; ஜீவகளை பொலியும் முகவதனம்'''அன்றைக்குஅந்த யாத்திரிகத் தேவதாருவின் நோக்கிலும்கூட ஜயந்தி ஒரு பிராமணப் பெண்ணாகத்தான் ஒருவேளை தோற்றியிருப்பாளோ! நெடுந்தூரக் கிராமத்திலிருக்கும் என் தாயாரின் முன்னிலையில் ஜயந்தியை அழைத்துக்கொண்டு போய் விட்டால் அந்த முதுமைப் பிராட்டியின் கண்களுமே ஜயந்தி ஒரு சிங்களப் பெண் என்று ஒருபோதும் ஒப்புக்கொள்ளா... ஒருதடவை ஜயந்தியை என் கிராமத்துக்கு அவசியம் அழைத்துப் போகவேணும்!'

வெகுநேரம் இவ்விதமாகப் படுக்கையில் கிடந்து உழன்றடித்திருக்கவேணும், பொழுது விடிந்தபோது ஆழ்ந்தயர்ந்த உறக்கத்தின்பின் கண்விழித்த புத்துணர்ச்சியுடனே எழுந்தேன். வழமைபோல் என் பணிமனைக்கும் ஏகினேன்.

(தொடரும்)

# அன்புத்தோழன்

[25]

மனிதரைப் பிடித்துத் தின்னும் இராட்சத மரங்களின் இலைகள் கருகி உதிரத்தொடங்கின அதை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த விக்கிரமன் மதனகல்யாணியில் ஏறினன். அது கொத்திமலையின் உச்சியை நோக்கிப் பறந்தது.

கொத்திமலையின் உச்சியில் கொள்ளிக்காடனது மாளிகை இருந்தது அந்த மாளிகையை வட்டமிட்ட மதனகல்யாணியை வாசலில் இறக்கினன் விக்கிரமன்.

வாசலைக் காவல் செய்த இரு இராட்சத உருவங்கள் மல்லாந்துகிடந்தன.

விரைந்தான். காளிதேவியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு புலம்பிய கொள்ளிக்காடன் வாசலில் அரவம் கேட்டதும் துள்ளி எழுந்தான்.

விக்கிரமன் கோபாவேசத்துடன் கொள்ளிக்காடன் மீது பாய்ந்தான். இருவரும் உக்கிரமாகப் போரிட்டனர். பலம்மிகுந்த கொள்ளிக்காடனால் விக்கிரமனை எதிர்க்க முடியவில்லை தப்புவதற்காக வாசலை நோக்கி ஓடினன்.

வாசலில்மதனகல்யாணிநின்றது அதில் கொள்ளிக்காடன் தாவி ஏறினன் கொள்ளிக்காடன் எதிர்பார்த்தது நடக்கவில்லை. மதனகல்யாணி அவனைப் புரட்டி நிலத்தில் தள்ளி

- சி. வி. குணசேகரம் -

விக்கிரமன் மதனகல்யாணியிலிருந்து இறங்கி மாளிகைக் கதவைத்தள்ளினன் அவனது கைபட்டதும் கதவுகள் திறந்து கொண்டன. விக்கிரமன் மெதுவாக நகர்ந்து உள்ளே சென்ருன்,

மாளிகைச் சுவரிலிருந்த தீவட்டி ஒன்று 'சட சட' வென்று பொறிகளைக் கக்கியது.

விக்கிரமன் ஒரு கணம் தயங்கினன். 'தீப்பந்த உருவில் கொள்ளிக்காடன் தான் இருக்கிறனோ?' என்ற திகில் அவன் இதயத்தைக் கலக்கியது. உடனே இந்திரனை நினைத்தான்.

'விக்கிரமா பயப்படாதே. முன்னேறிச்செல். இப்போ கொள்ளிக்காடனின் வீரியம் யாவும் அற்றுப்போய் விட்டது' என்று ஓர் அசரீரி ஒலித்தது

விக்கிரமன் இடையிலிருந்த உடைவாளை எடுத்துத் தயாராக வைத்துக்கொண்டு உள்ளே சென்ருன். சேதுபதி அவனைப் பின் தொடர்ந்தது, கொள்ளிக்காடனை இருவரும் அந்த மாளிகை முழுவதிலும் தேடினர். ஆனுல் கொள்ளிக்காடனைக் காணவில்லை. விக்கிரமன் மண்டபத்திலிருந்த ஆசனமொன்றில் அமர்ந்தான், சேதுபதி அப்பால் சென்றது.

திடீரென்று சேதுபதி விசில் அடித்தது. விக்கிரமன் சத்தம் வந்த திசையை நோக்கி யது. விக்கிரமனும் சேதுபதியும் வாசலுக்கு விரைந்துவந்தனர். விக்கிரமன் கொள்ளிக்காடனது மார்பின்மீது ஏறி அமர்ந்துகொண்டான்.

"கொள்ளிக்காடா என்னை யாரென்று உனக்குத் தெரி

[9-ம் பக்கம் பார்க்க]

## பள்ளிப்பகிடி

ஆசிரியர்: ராமு; கண்ணாடி எதற்கு உதவும்,

ராமு: நாம் உயிரோடு இருக்கிறோமா இல்லையா என்று பார்க்க,

ஆசிரியர்: ? ? ?

மாணவன்: சார் ஏன் உங்க தலை மொட்டையாயிருக்கு, கதிர்காமம் போனீர்களா?

ஆசிரியர்: இல்லேடா. சென்ற வாரம் கிராமசபை தேர்தலில் நின்றேன்,

மாணவன்: ! !! !!!

ஜெகதானந்தன்
விக்டோறியாக் கல்லூரி
சுழிபுரம்.

## சிறுகதை

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

தது ரமா மருதானையில் இறங்கிக்கொண்டாள். சங்கர் அவளுடைய பெட்டிகளை இறக்கிக் கொடுத்துதவினான். இரண்டு நிமிடங்களில் புகைவண்டி அசையத் தொடங்கியது ரமா சங்கரை மீண்டும் மீண்டும் சந்திக்கலாம் என்ற மகிழ்வுடன் தன்னுடைய கைகளை அசைத்து உணர்ச்சிகளை வெளியிட்டாள். சங்கர் கண்களில் நீர் மல்க ரமாவையே பார்த்தபடி நின்றான். கண்ணீரில் ரமா மறைந்துவிட்டாள். ரமாவை விட்டுச் சங்கர் எட்ட எட்டச் சென்று கொண்டிருந்தான். ரமா சங்கருக்கு எட்டாத தூரத்திலே நின்றுவிட்டாள் எட்டாப்பழம்போல...

(யாவும்கற்பனை)


Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
That Was A German Soldier
(2nd world war)

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
கல்யாணியின் கணவன்

12-வது வாரம்
வின்ஸர் [யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி 5 தினங்கள்
ஶ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
சிவாஜி-வரலட்சுமி
நான் பெற்ற செல்வம்
(புதிய பிரதி)

கடைசி 5 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடி வாழை

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-தேவிகா நடித்த
அன்னை இல்லம்
(புதிய பிரதி)

REGAL (Jaffna)
Daily 5 Shows
10-30 a.m., 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
ஜெய்சங்கர்—லக்ஷ்மி
4 காட்சிகள்
ராணி யார் குழந்தை
(புதிய பிரதி)

லிடோ [யாழ் நகர்]
போன்: 7638
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

சாந்தி யாழ்நகர்
போன்: 7642
கடைசித்தினம் 18-3-79
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜீற்றேந்திரா - ஜெயபாதுரி - பிரான்
"பரிச்சே" - ஹிந்தி - ஈஸ்ட்மன் கலர்
19-3-79 THE GIPSY CAMP VANISHES in to the BLUE

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
பணித்திரை
(புதிய பிரதி)


# பிச்சை வேண்டாம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் சேர்ந்து ஒருவருக்கொருவர் சேவைசெய்வதிலிருந்தும் இதைத் தொடங்கலாம்.

### அடிப்படைத் தத்துவங்கள்

'ஒரு' கருத்துள்ள குறிக்கோளுள்ள வாழ்க்கையைக் கட்டி எழுப்பவேண்டிய அடிப்படைத் தத்துவங்களாவன-

(1) ஒருவர் சொந்தமாக வாழ்வதற்கு உரியஇடம்.

(2) தேவையானபொழுது தேவையான உதவி. ஆனால் அதை ஏற்பது உதவிபெறுபவரின் விருப்பத்தைப் பொறுத்தது.

(3) ஊதியத்திற்காக உழைப்பவற்கு உரிய சந்தர்ப்பம்.

(4) ஓய்வும், விளையாட்டும்.

(5) சமயக்கடமைகளை முடிப்பதற்குஉரியசந்தர்ப்பம்.

(6) ஜனநாயக முறையில் சொந்த, சமூக வாழ்வில் பங்குபற்றுவது.

மிகவும் ஊனமுயறவர்கள் கடிதங்களை தட்டச்சில் அடிப்பதில், சுகவீனகாரரைச்சென்று பார்ப்பதில், மற்றவர்களுக்கு வாசிப்பதில், கூடைபின்னுவதில், பூக்களினால் அலங்கரிப்பது முதலியவற்றில் மாத்திரமே உதவக்கூடும். தன்னால் ஒன்றுமே முடியாது என்று கருதிய ஒருவருக்கு இச்செயல்கள் தன்னை உணருவதற்கும், மற்றவர்களால் பாராட்டப்படுவதற்கும், ஏற்றுக்கொள்ளப்படுதற்கும் உதவுகின்றன.

இப்படியான வேலைகளுக்கு புனருத்தாரண இல்லங்களில் வலது குறைந்தவர்களை பயிற்றுவிக்கவேண்டும். இந்த இல்லங்களில் அவர்களைப் பயிற்றுவிப்பது சுலபமானது வேலையை குறைப்பதும்ஆகும். இது செலவும் சுருக்கம். வேலை என்பது நாலு பெரிய துன்பங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றுகிறது! அவையாவன: வறுமை, வீணே நேரத்தைக் கழித்தல், பாவம், நோய். பல வருடங்களாக வேலையற்றிருப்பதானது உடலில் உள்ள நோவிலும் பார்க்க தாங்குவதற்குக் கஷ்டமானதாகும். எந்த ஒரு மனிதனாவது இன்னும் ஒரு மனிதனுக்கு செய்யக்கூடிய மிக பெரிய உதவி, அவனுக்கு செய்வதற்கு வேலை கொடுப்பதாகும்.

### எம்- ஏ. பட்டம் பெற்றவர்

எட்வேட் றுபேர்ட்ஸ் கை, கால் வழங்கமுடியாதவர். அவர் ஒவ்வொருநாளும் பன்னிரண்டு மணித்தியாலயங்களுக்கு செயற்கைச் சுவாச இயந்திரத்திற்குள் இருக்க வேண்டும். கலிபோர்னியா சர்வகலாசாலைக்குள் பிரவேசிக்க அனுமதி கேட்டபொழுது அவருடைய கோரிக்கை, அவரால் மின்சக்கர நாற்காலியை உபயோகிக்கமுடியாது என்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது. இதுமாத்திரமல்ல, சர்வகலாசாலைக்குப் போகவேண்டாமென்று புனருத்தாரணத் திணைக்களம் தடுத்தது. அவரால் ஒருக்காலும்வேலைசெய்ய முடியாதென்றும் மின்சக்கர நாற்காலியை ஓட்டக்கூடியதாக வரமாட்டாது என்றும் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய புத்திமதிகளைப்புறக்கணித்துவிட்டு. சமூக விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியுடன் எம். ஏ. பட்டம்பெற்றார். அவர் மின்சார நாற்காலியைஉபயோகிக்க திறமை பெற்றார். அவர் இயங்கக்கூடியதாக வந்ததினால் அவருடைய வாழ்க்கை பெரிதும் மாறியது. அவர் சர்வகலாசாலையில் இருக்கும்பொழுது 'சுதந்திர வாழ்வின் நிலையம்' என்ற சங்கத்தை ஆரம்பித்தார். அது முழுக்க வலது குறைந்தவர்களாலேயே வலதுகுறைந்தவர்களுக்காகவே நடத்தப்படுகின்றது. அவர் இப்பொழுது கலிபோர்னியா மாகாணம் முழுவதற்கும் புனருத்தாரண ஆணையாளராக உயர்ந்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் வலது குறைந்தவர்களில் வைத்திய நிபுணர்களும், பொறியியல் வல்லுநர்களும், விமானமோட்டிகளும், போதகர்களும், சட்டத்தரணிகளும், எல்லாவகையான தொழிலாளர்களும் இருக்கின்றார்கள். நாங்கள் எந்த வேலையையும் நன்றாகச் செய்வோம்; வேலைதாருங்கள். வேலைசெய்வதற்குரிய உபகரணங்களைத் தாருங்கள். நாங்கள் வேலைசெய்து எங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவோம். எங்களுடைய சுயமரியாதையை மீண்டும் எங்களுக்கு தருபவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்களாக.

இந்த புனருத்தாரண இல்லங்கள் ஒரு முக்கோணத்தின் மையமாகவும் கருதப்படலாம். அதன்மூலைகள் வைத்தியசாலைகளாகவும், ஊனமுற்றவர்களின் வீடாகவும், தொழில் செய்யும் இடமாகவும் இருக்கும். வீட்டில் வாழ்வதற்கும் ஒருதொழிலைச் செய்வதற்கும், வீட்டிலிருந்து தொழில் செய்யும் இடத்திற்குப் போவதற்கும் வெளிஉலக பிரச்சனைகளுக்கு ஈடுகொடுப்பதற்கும், இந்த இல்லங்கள் தேவையான பயிற்சியைக் கொடுக்கவேண்டும். இவ்வில்லங்கள் தங்களுடைய வீடுகளுக்குப்போகமுடியாதவர்களை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

வலதுகுறைந்தவர்கள் உங்களுடைய சகோதர சகோதரிகளே. உங்களுக்கு அரசாங்கத்திலும், கொடை வள்ளல்களிடத்தும் தொழிலதிபர்களிடத்தும் செல்வாக்குண்டு ஒரு தேசத்தின் பண்பாட்டினதும், கலாச்சாரத்தினதும் தரம், அது தன்னுடைய துர்ப்பாக்கிய மனிதரை எவ்வாறு நடத்துகின்றது என்பதைப் பொறுத்தே மதிக்கப்படுகின்றது. சந்தோஷமாக இருப்பதற்கு ஒரேவழி பிறர்சந்தோஷமாக வாழ உதவுவதுதான். இவைகள் எல்லாம் ஒன்றையே குறிக்கின்றன. அதாவது நீங்கள் ஊனமுற்றவர்களுக்கு உதவ கடப்பாடு உடையவர்கள் என்பதுதான் நீங்கள் இதை விலக்கவோ, புறக்கணிக்கவோ முடியாது

### யாழ்ப்பாணத்தின் குறை

யாழ்ப்பாணத்தில் ஒரு புனருத்தாரண இல்லமும் இல்லை இதுமிக அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகும். உங்களுடைய இதயத்தையும் சிந்தனையையும் இதில் வைத்து உங்களால் இயன்றளவு உதவுங்கள். ஊனமுற்றவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவ இப்போது உதவுங்கள். 'இப்பொழுது' என்ற ஒரே பறவைதான் பொன்முட்டைகளை இடும்

ஊனமுற்றவர்களுக்கு இல்லங்கள் நிறுவி உதவ யாழ். லயன்ஸ் கழகமும் வேறுசிலபிரமுகர்களும் முயற்சிஎடுத்து வருகிறார்கள். இவர்களுடன் சேர்ந்து ஏனையவர்களும் உதவலாம்.

## ஹோமியோ......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாசிக்கும் காற்று அசுத்தமடைவதே இதற்குக்காரணம். பஸ்வண்டி, கார், தொழிற்சாலை ஆகியன நாம் சுவாசிக்குப் காற்றை அசுத்தப்படுத்துவதும் முக்கிய காரணமாகும்.

ஆகவே தடுப்புமுறைகளுடன் தொடர்ச்சியாக ஏற்படும் பல்வேறு நோய்களுக்கும் ஹோமியோபதி மருந்துகளையே உட்கொண்டு வருவதால் இக்கொடிய நோயின் உபத்திரவமும் உயிராபத்தும் ஏற்படபமல் தவிர்க்கலாம். கூடியவிரைவில் சகல மக்களும் இச்சிகிச்சைமுறையை மேற்கொள்ளக்கூடியவகையில் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் கௌரவ சுகாதார அமைச்சர் அவர்களுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருப்போம்.

## ஊற்று

'ஊற்று' செப்டம்பர், அக்டோபர் மாத 6வது ஏடு கிடைக்கப்பெற்றோம்.

அறிவியல் சார்ந்த பல அருமையான - பத்திரப்படுத்தி வைக்கக்கூடிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மருத்துவம், சுகாதாரம், பனை ஆராய்ச்சி, யாழ் குடாநாட்டில் உவர்நீர் வெளியேற்றத் திட்டம், நீரும் விவசாயமும், கைத்தொழில், சித்த வைத்தியம் என பல்வேறு தலைப்புகளில் அவ்வத்துறைகளில் தேர்ச்சிபெற்றவர்களால் இக்கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன.

கல்லூரி-பல்கலைக்கழகமாணவர்களுக்கும், அறிவியல்துறையினருக்கும் பெரிதும் பயன்படக்கூடிய இச்சஞ்சிகையின் விலை 2 ரூபாய் மட்டுமே

வாசகர் வட்டத்தைப்பெருக்கிக்கொள்ளும் வகையில் சஞ்சிகையின் தோற்றம் பொலிவில் மேலும் சற்று கவனம் செலுத்தலாம். —பெ

## அன்புத்தோழன்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யாதா? நான்தான் விஜயபுரி இளவரசன்விக்கிரமன் அன்று விஜயபுரி அரண்மனையுள் புகுந்து என் தந்தையைக் கொன்றுதங்கையைக் கடத்தியதோடு மட்டுமல்லாது எனது அன்புத்தாயையும் கொடுமையாகத் தாக்கிவிட்டுவந்தாய்... நான் உன்னை பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன்... எங்கே என் தங்கை?'-விக்கிரமன் கர்ஜித்தான்

'அவளை நான் காளிதேவிக்குப் பலிகொடுத்துவிட்டேன்'

'பொய்சொல்லாதே, காளிதேவி ஒரே வயிற்றில் இரட்டைக்குழந்தைகளாகப் பிறந்தவர்களைத்தான் பலிகேட்டது!''

தனது குட்டு அம்பலமானதும் திகைத்த கொள்ளிக்காடன் ',அவள் இருக்குமிடத்தைக் கூறமாட்டேன்' என்றான்

கொள்ளிக்காடனின் கைகளையும் கால்களையும் விக்கிரமன் கட்டினான். சேதுபதி தனது தொடையில் கத்தியால் கீறியது கொள்ளிக்காடன் வேதனையைத் தாங்கமுடியாது பலமாக அலறினான்.

'கொள்ளிக்காடா நீ உண்மையைக்கூறுவிட்டால் உன்னை துண்டுதுண்டாகச் சீவுவேன்' என்றான் ஆவேசத்துடன் விக்கிரமன்

'கூறமாட்டேன், அவர்களும் என்னுடன் அழிந்துபோகட்டும்' என்றான் கொள்ளிக்காடன்

சேதுபதி கொள்ளிக்காடனது விரல்களை ஒவ்வொன்றாக வெட்டியது- கொள்ளிக்காடனால் வலியைத் தாங்க முடியவில்லை

'விக்கிரமா என்னை ஒன்றும் செய்யாதே உனது தங்கையை மலையின் அடிவாரத்தில் சிறைவைத்துள்ளேன்...' என்று முனகினான்

"சேதுபதி இவனைக் கவனித்துக்கொள் நான் மணிக்கொடியை மீட்டுக்கொண்டு வருகிறேன்' என்ற விக்கிரமன் மதனகல்யாணியில் ஏறினான், அது அடிவாரத்தை நோக்கி பறக்க ஆரம்பித்தது-

(அடுத்த எண்ணத்தில்)


வெஸ்லி
[கஞ்சிப்பானை]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை

# "ஐ. நா. வைகுந்தவாசன்" லண்டன் விழாவில் விருது

கிழக்கு லண்டனில் இயங்கும் தமிழ் முன்னேற்றக் கழகத்தினால் நடத்திய பொங்கல் விழா பற்றிய விபரம் 'லண்டன் முரசு' சஞ்சிகையில் வெளியாகியுள்ளன. அதனை இங்கு தருகின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குக் குரல் கொடுத்த இளைப்பாறிய நீதி தி திரு வைகுந்தவாசனுக்கு சிறப்பு விருது அளித்து கௌரவித்தனர். கிழக்கு லண்டனில் இயங்கிவரும் தமிழர் முன்னேற்றக் கழகத்தினர் "ஐ. நா. வைகுந்தவாசன்" என்ற சிறப்பு விருதை அவருக்கு ஜனவரி 13-ம் நாளன்று ஈஸ்ட்ஹாம்மில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது அளித்தனர்.

கிழக்கு லண்டனின் ஈஸ்ட்ஹாம்மில் நடைபெற்ற பொங்கல் திருநாள் விழா தமிழர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு ம. கி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. விழாவின் குழுத் தலைவர் திரு. வீர, ரத்தினம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். 300 க்கு மேற்பட்டோர் விழாவில் பங்குபற்றினர். கழகத்தின் செயலர் திரு சுப சேகர் ஆங்கிலத்தில் பொங்கல் விழாவின் சிறப்பு பற்றி விளக்கினார். அடுத்து தமிழகத்திலிருந்து எதிர்கட்சித்தலைவர் கலைஞர் கருணாநிதி அனுப்பியிருந்த வாழ்த்துச்செய்தி ஒலிப்பதிவு நாடா மூலம் ஒலிபரப்பப்பட்டது

இளைப்பாறிய நீதிபதி திரு வைகுந்தவாசன் "பாரதி கண்டகனவு" பற்றி சிறப்புரை நிகழ்த்தினார். பாரதியின் நாட்டுப்பற்று, தேசிய உணர்வு, இலக்கியவளம் பெருமிதம் ஆகியவற்றை விளக்கி உரை ஆற்றினார்.

திருவள்ளுவர் பள்ளியின் மேலாண்மைக் குழுத்தலைவர் திரு ஜான்பலிம் [இவர் துணைவியார் தமிழ் பெண்மணி தற்போது தமிழ் ஆசிரியை] உலகின் பழமையான இலக்கியவளம் மிகுந்த மொழி தமிழ் என்பதை விளக்கியதோடு அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்ச்சிறுர்கள் தவறாமல் தமிழ் கற்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அடுத்துப்பேசிய நியூஹாம் நகர வட்டாரக்கல்வி நெறியாளர் தமிழோடு ஒருவாறு ஒப்பிடக்கூடிய தொன்மையான மொழியாக சீனத்தைக் குறிப்பிடலாம் என்றார் தாய்மொழி கற்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்திய அவர் இனி அரசுகல்லூரிக் கட்டிடத்தில் தமிழை வாரா வாரம் கற்றுத்தர உதவிசெய்வதென உறுதியளித்தார். விழாவிற்கு வந்திருந்தோருக்கு வாழ்த்துக் கூறுகையில் அவர் உலகில் தொன்மையான தமிழை பழமையான வெவ்ஷ் மொழியிலேயே வாழ்த்தினார். பின்னர் திருவள்ளுவர் சைவப் பள்ளியின் மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. பரிசுத்தேர்வின் தேர்வாளர்களாக லண்டன் முரசின் சிறப்பாசிரியர்கள் 'தமிழ்மணி' அரங்க முருகையன் அவர்களும் 'சைவத் தமிழ் மணி' ஞானசூரியன் அவர்களும்இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பரிசுகளும் சான்றிதழ்களும் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் வழங்கப்பட்டன. பரிசுகளும் நியூஹாம் கல்வி வட்டார நெறியாளரின் துணைவியார் வழங்கினார். திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் 3-வது ஆண்டு நிறைவினை ஒட்டிய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அடுத்து திரு. வைகுந்தவாசன் அவர்களுக்கு "ஐ.நா. வைகுந்தவாசன்" என்றசிறப்பு விருது அளிக்கப்பட்டது விருதை கழகத்தின் சார்பில் வழங்கிய அரங்க முருகையன் பேசியபோது: ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் ஈழம்பற்றி முழங்கியதால் நாம் 'ஐ நா. வைகுந்தவாசன்' என்றசிறப்பு விருதை அவருக்கு அளிக்கிறோம். அதுமட்டுமல்ல 'ஐ' என்றால் தலைவர் எனவும், 'நா' என்றால் நாவன்மையையும் குறிக்கும் என்றார். அந்தக் காலத்தில் மன்னர்களுக்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று அழைத்தது போல் இனி திரு. வைகுந்தவாசனை 'ஐ நா. வைகுந்தவாசன் என அழைப்போம் என்றார் திரு. அரங்க முருகையன்.

இவ்விழாவில் 'அன்னக்கிளி' தமிழ் திரைப்படமும் திரையிடப்பட்டது.

[நன்றி-லண்டன் முரசு]

# 'உலக சாதனையை ஏற்படுத்தியே தீருவேன்'

## யாழ். 'டுவிஸ்ட்' வீரர் உறுதி

[யாழ்ப்பாணம்[

'தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்தன்று எனது உலக சாதனையை மீண்டும் நிலைநாட்டுவேன்' என யாழ்ப்பாண டுவிஸ்ட் வீரர் ஜனுப் பரீத் நஸீர் தெரிவித்தார்.

பல லட்சம் மக்கள் எனக்கு ஜாதி மத பேதமின்றி அளித்த பேராதரவை என் வாழ்க்கையில் மறக்கமுடியாது. அவர்களது ஆவலை நிச்சயமாக நிறைவேற்றிவைப்பேன்' என்று அவர் ஆர்வத்துடன் கூறினார்.

'அன்று மேடையில் எனக்கு ஏற்பட்ட அசௌகரியங்களினால் என் உடல்நிலைதிடீரென பாதிக்கப்பட்டது சுயநினைவை இழந்தேன் தொடர்ந்து ஆடமுடியாத நிலை ஏற்பட்டது. இதனாலே எனது சாதனை திசைதிருப்பப்பட்டது அதற்காக எனக்கு ஆதரவு வழங்கிய மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்' என்று கூறிய ஜனுப் பரீத் நஸீர்; 'ஈழநாடு' பத்திரிகை எனது முயற்சிக்கு பேராதரவு அளித்துவந்தது. அதற்காக நன்றி கூறுகிறேன். என்றார்

'மீண்டும் ஜின்னா மைதானத்தில் உலக சாதனையை ஏற்படுத்துவேன். அம்முயற்சிக்கு பொதுநிறுவனங்களே ஆதரவு அளிக்கும். எனது சாதனை நிச்சயமாக 200 மணித்தியாலங்களாக அமையும் என்று உறுதி கூறினார். [கெ]

## தவக்கால நற்சிந்தனை

'வத்திக்கானில் அமைக்கப்பட்டிருக்கும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் திருச்சிலைக்குமுன் தலைபணியக் கிடைத்த வாய்ப்பிற்கு நான் வேறெதையும் கைமாறாக அளிக்கமாட்டேன்! உயிர்ததும்பும் அந்தத் துயரக் காட்சியினின்று என்னையே வெளிக்கொணர மிகுந்த முயற்சி தேவைப்பட்டது, சிலுவையின் கொடிய வேதனைகளினின்றுதான் சமூகங்களும், தனி ஒரு மனிதனும் உருவாகின்றனர் என்று நான் அங்கு உணர்ந்துகொண்டேன்'

'என் செயல்களனைத்தும் வழி நடத்தும் அகிம்சைக் கொள்கையின் பாலுள்ள என் அசையா நம்பிக்கை உருவாவதற்குச் சிலுவையிலறையுண்ட கிறிஸ்து ஒருவரே எனக்கு முன்மாதிரியாக விளங்குகிறார்'

—காந்தி அடிகள்


வை. எம். சி. ஏ.

## இளைஞர் பயிற்சி நிலையம்

## பரந்தன்

### 1979/80-ம் ஆண்டு பயிற்சிக்கான விண்ணப்பம்

விவசாயம், கால்நடை வளர்ப்பு, பழச்செய்கை, பண்ணை நிர்வாகம் என்பனவற்றில் ஆண்களுக்கென நடாத்தப்படும் ஒரு வருட வாசஸ்தல பயிற்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் க பொ. த. [சாதாரணம்] அல்லது தெ க. பொ த. [சாதாரணம்] வரைக்கும் படித்திருத்தல் வேண்டும்.

இலவசமாகப் பயிற்சி அளிப்பதுடன், பயிற்சிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு உணவிற்கான உபகாரச் சம்பளமாக ரூபா 4/- கொடுக்கப்படும்.

முழு விபரங்களுடன் விண்ணப்பத்தை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 31-3-1979.

இயக்குநர்

வை. எம். சி. ஏ. இளைஞர் பயிற்சி நிலையம்

பரந்தன். 1934


# பிரச்னையை இந்திய மக்களுக்கு விளக்குவேன்

—அமிர்

[கொழும்பு]

விடுதலைக்காகப் போராடும் எந்த ஒரு நாடும் வெளிநாட்டுத் தொடர்பின்றி விடுதலை பெற்றுவிடமுடியாது. இந்நிலையில் எமது பிரச்னைகளை அண்டை நாடான இந்தியா அறிந்திருக்கவேண்டும். எனது இந்திய விஜயத்தின் போது எமது பிரச்னைகளை இந்திய மக்களுக்கு விபரமாக எடுத்துக் கூறுவேன்.

இவ்வாறு இந்தியாவில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் புறப்படுவதற்கு முன்னர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;.

தென்னிலங்கை என்றாலும் சரி தமிழ் ஈழம் என்றாலும் சரி இரண்டுக்குமே இந்தியா தான் அண்டை நாடு. எனவே இந்தியா எமது பிரச்னைகளை அறிந்திருக்கவேண்டும்; அவற்றின் தீர்வில் அக்கறை கொண்டிருக்கவேண்டும்.

இந்திய மக்கள் குறிப்பாக தமிழகத் தலைவர்களும் அரசும், செய்தி ஸ்தாபனமும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து சரியான முறையில் அறிந்துகொள்ளவில்லை.

எனவே எமது பிரச்னைகளை அவர்கள் சகலருக்கும் விளக்க வேண்டியது எனது கடமை. இதற்கு எனது இந்திய விஜயம் பெரிதும் உறுதுணையாக இருக்கும் [ந-இ]

# சுற்றறிக்கையில் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லை?

## பண்டிதர் பிரதமரிடம் கேள்வி

[கொழும்பு]

'திட்டம் நிறைவேற்றல் அமைச்சின் செயலளர் எனக்கு அனுப்பிய சுற்றறிக்கையிலும் படிவத்திலும் தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டுள்ளதென்பதையும் இது குறித்து நான் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்திற்கு அவர் இதுவரை பதில் எழுதவில்லை என்பதை பிரதமர் அறிவாரா?'

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பீ. திரு. க. பொ. இரத்தினம் பிரதம அமைச்சரும் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரிடம் வாய்மூல விடைக்கான கேள்விக்கு முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

இம்மாதம் 23-ம் திகதி பாராளுமன்றம் கூடும்போது அவர் கேட்பதற்கான கேள்விகளில்; திட்ட நிறைவேற்றல் அமைச்சு இனிமேலாகுதல் தமிழைப் புறக்கணிக்காமல் புதிய அரசியல் அமைப்பில் தமிழுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமையை மதித்து தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் கேட்கவுள்ளார்.

## தமிழக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவர் என்று தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நேற்றுத் தம்மைச் சந்தித்த வழக்கறிஞர்களிடமும் இன்று சட்டசபையிலும் தெரிவித்தார், [இ[

## தமிழ்நாடு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ழக சட்டசபைக்கும் சட்டமேல்சபைக்கும் சென்று நிகழ்ச்சிகளைப் பார்த்தனர்

இரு சபைகளிலும் இவர்கள் சுமார் ஒரு மணித்தியாலம்வரை இருந்து நிகழ்ச்சிகளை அவதானித்தனர்

### எம். எல்.ஏக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

சட்டசபைக்கு திரு அமிர்தலிங்கம் வருகை தந்ததை சபாநாயகர் சபையில் அறிவித்ததும் சட்டசபை உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர்

### ம. பொ, சி—அமிர் சந்திப்பு

பின்னர் திரு அமிர்தலிங்கம் சட்டமேல்சபைத் தலைவர் திரு ம பொ சிவஞானத்தையும் சட்டசபை சபாநாயகர் திரு முனு ஆதியையும் சந்தித்து உரையாடினர். [ம-இ[

உள்ளத்தைத் திறந்து வெளியிட்ட வார்த்தைகளல்லவா இவை.

—ஞான ஒளி :

தொகுப்பு : வில்பிறெட்

## தேர்தல் ஒப்பந்தம்?

[கொழும்பு[

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

உள்ளூராட்சித் தேர்தல் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இரு கட்சியினருக்குமிடையே தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இலங்கை வரலாற்றில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடுவது இதுவே முதல் தடவையாகும். ]ம-இ]

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்[

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தரக் கருத்தரங்கு இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனையில் நடைபெறவுள்ளது,

'விடுதலை கோரி நிற்கும் தமிழ் ஈழத்துக்கு இணைப்பு மொழி எதற்காக' என்னும் பொருள் பற்றி யாழ். டல் கலைக்கழக விரிவுரையாளர் திரு கே, சச்சிதானந்தனும். 'எல்லாம் தமிழில் செய்து வாழ்வோம் தமிழைக்காப்போம் வாரீர்' என்னும் பொருள் பற்றி திரு, வண்ணை ஆனந்தனும் உரையாற்றுவர்,

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

ருமே இக்குழுவில் தலைமை தாங்கி வருகின்றனர். இவர்களுடன் வேறு பல அடியார்களும் வருகின்றனர்.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணமலை, கதிர்காமம், கொழும்பு, கண்டி, அனுராதபுரம் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள தலங்களைத் தரிசிப்பார்கள். இவர்களுக்கு ஆங்காங்கு வரவேற்புகளும் அளிக்கப்படவுள்ளன.

20-ம் திகதி கொழும்பில் வந்து இறங்கும் இக்குழுவினர் 31-ம் திகதி தாயகம் திரும்புவார்கள், இக்குழுவினரின் நிகழ்ச்சித்திட்டம் பாதிக்கப்படா வண்ணம் பக்தர்கள் ஆங்காங்கு தரிசிக்கலாம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389,